# வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்லப் போகிறீர்களா?

## TRAVEL TIPS

B.K. அருணா
B. கனக சபாபதி



# வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்லப் போகிறீர்களா?

## Travel Tips


**B.K. அருணா**

**B. கனக சபாபதி**

“ என் அப்பாவிற்கு... ”

## முன்னுரை

**B.K. அருணா**
96/1 பாரதிதாசன் சாலை
கண்டோன்மென்ட்
திருச்சிராப்பள்ளி – 620 001

Phone : 0431 - 2465915
Mobile : 97918 - 50706
E.mail : ever_aruna@yahoo.com

அனைத்திந்திய மதிப்பீட்டாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்த என்னுடைய அப்பா B.கனகசபாபதி அவர்கள் கருத்தரங்குகளுக்காகவும் மாநாடுகளுக்காகவும் இந்தியாவில் உள்ள பல நகரங்களுக்குச் செல்கையில் என்னையும் என் அண்ணன் அருணையும் உடன் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மூன்று வயதிலிருந்தே நான் பயணம் செய்யத் துவங்கினேன். அதன்பிறகு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள வெவ்வேறு நகரங்களுக்கு பயணம் செய்து என்னுடைய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டேன்.

19வது வயதில் இருந்து வெளிநாடுகளுக்கு சுற்றுலாப் பயணியாக செல்லத் தொடங்கினேன். ஜெர்மனி, நார்வே, சுவீடன், போலந்து, ஹங்கேரி, போன்ற 19 நாடுகளைப் பார்த்து வந்தேன். ஒவ்வொரு நாட்டிற்கு செல்லும்போதும், அந்நாட்டின் வரலாறு, கலாச்சாரம், மக்களின் பழக்க வழக்கங்கள், வானுயர்ந்த கட்டிடங்கள், பனிபடர்ந்த மலைகள்,அழகிய சாலைகள், அந்தந்த நாட்டின் விமான நிலையங்களின் அமைப்பு போன்றவைகளைப் பார்த்து, அனுபவித்து குறிப்புகள் நிறைய எடுத்துக்கொண்டேன். புதிதாக சுற்றுலா மேற்கொள்ளுபவர்கள், அதிலும் தனியே செல்லும் பெண்கள், முதியவர்கள், பயணத்தின் விதிமுறைகள் பற்றி போதிய அளவு தெரியாததால் பல சமயங்களில் திணறுவதைப் பார்த்தேன். அப்படிப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் என்னுடைய அனுபவங்களை அவர்களுடன் ஏன் பகிர்ந்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இந்த நூல். தலைப்பு வாரியாகப் பிரித்து, ஒவ்வொன்றைப் பற்றியும் எனக்குத் தெரிந்ததை தெளிவாக விளக்கியுள்ளேன். தவறு இருப்பின் சுட்டிக் காட்டினால் ஏதுவாக இருக்கும். கருத்துக்கள் ஏதேனும் விடப்பட்டிருந்தால், மெயில் மூலம் எனக்கு தெரியப்படுத்தலாம். அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ள இயலும்.

தங்களுடைய பயணம் எவ்விதமான சிரமமும் இல்லாமல் அமைய என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

✦ ✦ ✦

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | டிராவல் ஏஜென்ஸி | |
| 2. | பாஸ்போர்ட் | |
| 3. | விசா | |
| 4. | டிக்கெட் | |
| 5. | பயண முன்னேற்பாடுகள் | |
| 6. | டிராவல் இன்ஷூரன்ஸ் | |
| 7. | ஏறும் விமான நிலையம் | |
| 8. | விமானப் பயணம் | |
| 9. | இறங்கும் விமான நிலையம் | |
| 10. | ஹோட்டலில் தங்குதல் | |
| 11. | Credit / Debit cum ATM Card | |
| 12. | பெண்களுக்கான சில யோசனைகள் | |
| 13. | ஷாப்பிங் | |
| 14. | வெளிநாட்டில் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் | |
| 15. | சர்க்கரை நோயாளிகள் கவனம் கொள்ள வேண்டியது | |
| 16. | தாயகம் திரும்பிய பிறகு | |
| 17. | சில இணைப்புகள் | |
| | 17.1 விமானத்தில் தடை செய்யப்பட்ட பொருட்கள் | |
| | 17.2 Departure card - மாதிரிப்படிவம் | |
| | 17.3 Arrival card - மாதிரிப்படிவம் | |
| | 17.4 Check List | |
| | 17.5 Documents necessary for the process of VISA | |


✦ ✦ ✦

## வெளிநாட்டு பயணத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான இரண்டு விஷயங்கள்

1. **பாஸ்போர்ட் மற்றும் உடைமைகளை எப்போதும் பத்திரமாக வைத்திருங்கள்.**

2. **உடலை ஆரோக்கியமாக வைத்திருங்கள்.**

## 1. டிராவல் ஏஜென்ஸி

1. முதன்முறையாக நீங்கள் சுற்றுலாப் பயணியாக வெளிநாடு செல்ல விரும்பினால், ஒரு நல்ல அனுபவமுள்ள டிராவல் ஏஜென்சியின் மூலமே பயணிப்பது பாதுகாப்பானதாகும். சற்று அனுபவம் ஆன பின்னர், நீங்களே உங்கள் பயணத்தைத் திட்டமிடலாம்.

2. டிராவல் ஏஜென்சி மூலம் செல்வதென்றால் அவர்கள் தரும் கையேடுகளை முதலில் இருந்து கடைசிவரை நன்கு படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். என்னவெல்லாம் பயண செலவில் சேர்க்கப் பட்டிருக்கின்றன, எது விடப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக புரிந்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய சட்டதிட்டங்களையும், குறிப்பாக ரத்து செய்யும் விதிமுறைகளையும் நன்றாக அறிந்து கொண்டால், பின்னால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களையும், அநாவசியமான மனஸ்தாபங்களையும், பண விரயத்தையும் தவிர்க்கலாம். அவர்களுடைய விதிமுறைகள் பெரும்பாலும் ஒரு தலைப்பட்சமாகவே இருக்கக்கூடும். ஏதேனும் சந்தேகம் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களிடம் எழுத்து மூலம் நன்றாக கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

3. சில நிறுவனங்களில், அவற்றின் பொறுப்பாளர் முதலில் இருந்து கடைசி வரை உங்களுடன் பயணித்து வழிகாட்டுவார். இது மிகவும் வசதியானது. விரும்பத்தக்கது.

4. சில டிராவல் ஏஜென்சிகள், உங்களுக்கு டிக்கெட், மற்றும் ஹோட்டல் போன்றவை அனைத்தும் ஏற்பாடு செய்வார்கள். உங்களுடைய சொந்தப் பொறுப்பில்தான் விமானத்தில் பயணித்து, அந்த நாட்டு விமான நிலையத்தை அடைய வேண்டும். எந்த நாட்டிற்குச் செல்கிறீர்களோ, அந்த நாட்டின் உள்ளூர் வழிக்காட்டி உங்களுக்காக காத்திருந்து வழிநடத்திச் செல்வார்.

✦ ✦ ✦

## 2. பாஸ்போர்ட்

1. வெளிநாடு செல்லும் முன், உங்கள் பாஸ்போர்ட் காலவரையை சரிபார்த்துக் கொள்ளுங்கள். குறைந்தபட்சம் ஆறு மாதம் இருக்க வேண்டும். குறைந்த நாட்களே இருக்கும் பட்சத்தில், பாஸ்போர்ட்டை புதுப்பித்த பிறகு உங்கள் பயணத்தை திட்டமிடுங்கள். அதேபோல் பாஸ்போர்ட்டில் போதிய பக்கங்கள் இருக்கின்றனவா என்பதையும் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

2. பாஸ்போர்ட்டின் முதல் பக்கம் மற்றும் கடைசி பக்கத்தை மூன்று நகல்கள் எடுத்து ஒன்றை வீட்டிலும், ஒன்றை பெட்டியிலும் மற்றொன்றை கைப்பையிலும் வைத்துக் கொள்ளுங்கள்.

3. அதிகப்படியாக இரண்டு போட்டோக்கள் உங்கள் பாஸ்போர்ட்டில் எப்போதும் இருக்கட்டும்.

4. பாஸ்போர்ட் அட்டையில் உங்களது சமீபத்திய சிறிய போட்டோவை ஒட்டிக்கொள்ளுங்கள். விமான நிலையத்தில் டிக்கெட் கவுண்டரிலோ, பாதுகாப்பு சோதனையின் போதோ அல்லது இமிக்ரேஷன் பிரிவிலோ, தற்செயலாக மறந்து வைத்துவிட்டுச் சென்றால், அங்குள்ளவர்கள் உங்களை மிக எளிதில், விரைவில் அடையாளம் கண்டுபிடித்து திருப்பிக் கொடுக்க வசதியாக இருக்கும்.

5. ஜெம் கிளிப்புகள் கொஞ்சம் எடுத்துச் செல்லுங்கள். பாஸ்போர்ட்டின் விசா பக்கத்தில் கிளிப் சொருகிக் கொண்டால் அதிகாரிகள் கேட்கும் போது சுலபமாக எடுத்துக் காண்பிக்கலாம். Arrival Card, Departure Card களை பூர்த்தி செய்து உடன் எடுக்க வசதியாக விசா பக்கத்திலேயே சொருகிக் கொள்ளுங்கள்.

6. பயணத்தின்போது பாஸ்போர்ட்டை ஆண்கள் தங்கள் சட்டை உள் பாக்கெட்டிலும், பெண்கள் தங்கள் கைப்பையிலும் வைத்துக் கொள்ளலாம். ஆண்கள் சட்டை உள்பாக்கெட்டில் பாஸ்போர்ட்டை வைக்கும்போது Ziplock போன்ற பையில் வைத்தால், வேர்வையினால் நனையாமல் இருக்கும். பெட்டியில் வைப்பது பல சமயம் பாதுகாப்பானது அல்ல.

7. பாஸ்போர்ட் வைத்திருக்கும் கைப்பையில் தண்ணீரோ அல்லது மற்ற திரவப் பொருட்களையோ வைக்க வேண்டாம். அதை தனி ( பிளாஸ்டிக் ) கவரில் இட்டு மிக பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

8. பாஸ்போர்ட்டை எப்போதும் உங்களுடனேயே வைத்திருப்பது அவசியம். கூடவே உங்கள் டிக்கெட் மற்றும் பணத்தையும் வைத்திருங்கள். பத்திரமாக இருக்குமென்ற நம்பிக்கையில் பெட்டியில் வைத்து பேருந்திலேயே வைக்காதீர்கள். சில வருடங்களுக்கு முன்னால் ப்ரஸல்ஸ் என்ற ஊரில் மதிய உணவிற்காக நிறுத்தப்பட்டிருந்த பேருந்தையே கடத்திவிட்டார்களாம்!

9. உங்களது பாஸ்போர்ட் எண்ணை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாஸ்போர்ட்டை அநாவசியமாக வெளிநபரிடம் கொடுக்காதீர்கள். பாஸ்போர்ட்டை பழுது படாமல் பத்திரமாகவும், தொலைக்காமலும் வைத்திருந்தாலே பயணம் இனிதாகவும் கவலை இல்லாமலும் அமையும்.

10. வெளிநாட்டில் பாஸ்போர்ட் தொலைந்துவிட்டால், நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், பதட்டப்படாமல் இருப்பதுதான். அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள். பிறகு அந்நாட்டின் தூதரகத்திற்கு சென்று, உங்கள் பாஸ்போர்ட்டின் நகலையும், டிக்கெட்டையும் காண்பியுங்கள். நீங்கள் இந்தியர்தான் என்று அவர்களுக்கு நிரூபியுங்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதில் அளியுங்கள். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் உங்கள் கைக்கு தற்காலிக வெளியேறும் அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்வார்கள். பாஸ்போர்ட் தொலைந்துவிட்டால், உண்டாகும் சிரமங்கள், பண விரயம், கால விரயம், பதட்டம், அசௌகரியம் அதிகமாக இருக்குமென்ற காரணத்தினால் வெளிநாட்டுப் பயணத்தின் போது அதை மிக மிக பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம் என்பதை உணர்ந்துக் கொள்ளுங்கள்.

✦ ✦ ✦

## 3. விசா

1. விசா பற்றிய விதிமுறைகளை முன்னதாகவே தெளிவாக அறிந்து கொண்ட பிறகு விசாவிற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

2. விசா எடுப்பதற்காகவே சில ஏஜென்ஸி மூலமாகவும் ஏற்பாடு செய்யலாம். சில நாடுகளுக்கு ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். பாலி, தாய்லாந்து, பூட்டான், கம்போடியா போன்ற நாடுகளின் விமான நிலையத்திலேயே Spot விசா வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட விசா அந்த நாட்டைச் சுற்றிப் பார்க்க ஏதுவாக சில நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது என்பதை அறியவும்.

3. விசாவிற்காக கொடுக்கும் புகைப்படம் ஆறு மாதத்திற்குள் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். எந்த நாட்டிற்கு விசா எடுக்கப் போகிறீர்களோ, அந்த நாட்டினரால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாக புகைப்படம் இருக்கட்டும். வெள்ளை சட்டை அணியாமல் கலர் சட்டை அணிந்து படம் எடுப்பது நல்லது.

4. விசா வழங்கும் பொருட்டு, சில நாடுகளின் தூதரகம், உங்களின் ஆறு மாத வங்கி கணக்கின் நகலை கேட்கக்கூடும். இரண்டு பேர் செல்கையில், உங்கள் வங்கிக்கணக்கின் இருப்பு, குறைந்தபட்சம், உங்கள் மொத்த பயண செலவுத் தொகைக்கு மேற்பட்டதாக இருக்கட்டும்.

5. இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு விசாவிற்காக நேர்முகத் தேர்வுக்கு சென்னை, மும்பை, டில்லி போன்ற நகரங்களுக்கு சில சமயம் நேரடியாக செல்ல வேண்டியிருக்கலாம்.

6. விசா வுக்காக அனுப்பப்பட்ட பாஸ்போர்ட் கைக்கு கிடைத்தவுடன் உங்கள் பெயர், பாலினம் மற்றும் சிங்கிள் / மல்டிபிள் என்ட்ரி மற்றும் எத்தனை நாட்களுக்கு விசா வழங்கப்பட்டுள்ளது என்று சரிபாருங்கள். விசா பக்கத்தை மூன்று நகல்கள் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

✦ ✦ ✦

## 4. டிக்கெட்

1. ஏஜென்சியிடம் டிக்கெட் வாங்கியபிறகு, பயணம் செய்யும் ஏர்லைன்ஸ் வெப்சைட்டிற்கு சென்று, அவர்களுடைய டிக்கெட்டின் ஒரு காப்பியையும் பிரிண்ட் அவுட் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

2. நீங்கள் சுத்த வெஜிடேரியனாக இருந்தால், விமான டிக்கெட் பதிவு செய்யும்போதே ஆசியன் வெஜிடேரியன் அல்லது ஜெயின் வெஜிடேரியன் என்று குறிப்பிடுங்கள்.

3. டிக்கெட்டில் உங்கள் பெயர் பாஸ்போர்ட்டில் உள்ளபடி இருக்கின்றதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

4. விமான கம்பெனி, விமான எண், புறப்படும் தேதி, நேரம், உள்நாட்டு விமான நிலையமா அல்லது பன்னாட்டு நிலையமா, எந்த டெர்மினலில் இருந்து விமானம் இயக்கப் படுகிறது போன்ற அனைத்து விவரங்களையும் மனதில் நன்றாக பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

5. விமானத்தில் உணவு தருவார்களா, இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தரவில்லை என்றால், அதற்கேற்றவாறு திட்டமிட்டுக் கொள்ளுங்கள். பட்ஜெட் விமானங்களில் பொதுவாக ஏதும் தரப்படுவது இல்லை. ஆகவே, எப்போதும் உங்களிடம் பிஸ்கெட் பாக்கெட் இருக்கட்டும்.

6. டிக்கெட்டின் மூன்று நகல்களை எடுத்துக்கொண்டு ஒன்றை பெட்டியிலும் மற்றொன்றை கைப்பையிலும் வைத்துக் கொள்ளுங்கள். மூன்றாவது நகலை வீட்டிலேயே வைத்துவிட்டுச் செல்லுங்கள்.

✦ ✦ ✦

## 5. பயண முன் ஏற்பாடுகள்

**பெட்டி**

1. லக்கேஜ் இரண்டு வகைப்படும். 1) கேபின் லக்கேஜ் 2) செக்–இன்–லக்கேஜ். கேபின் லக்கேஜ் என்பது விமான பயணத்தின்போது நம் கையிலேயே வைத்திருக்கும் பெட்டி. இது 7 கிலோவுக்குள் இருக்க வேண்டும். இதனுடைய மொத்த அளவு ( நீளம் + அகலம் + உயரம்) 110 செ.மீக்குள் இருக்க வேண்டும். இதை கேரி ஆன் லக்கேஜ் என்றும் குறிப்பிடுவதுண்டு.

   செக்–இன்–லக்கேஜ் என்பது பொதுவாக 23 கிலோவுக்குள் உட்பட்டதாக இருக்க வேண்டும். இதனுடைய மொத்த அளவு 62 அங்குலம் இருக்க வேண்டும். இது விமான கம்பெனிக்குத் தகுந்தாற்போல் மாறுபடலாம். ( பட்ஜெட் விமானம் என்றால் விதிமுறைகள் தனி ) போர்டிங் பாஸ் வாங்கும்போது அவர்களிடம் இந்த செக்–இன் லக்கேஜை கொடுத்துவிட்டால், அவர்கள் பொறுப்பில் அவர்களாகவே விமானத்திற்குள் எடுத்துச்சென்று, இறங்குமிடத்தில் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள்.

   இந்த இரண்டும் இல்லாமல் லாப்டாப் பேக் மற்றும் பெண்களின் சிறிய கைப்பையும் தனியாக எடுத்துச் செல்ல அனுமதியுண்டு. ஒருவேளை உங்கள் பெட்டியின் எடை குறிப்பிட்டிருக்கும் அளவைவிட அதிகமாக இருந்தால், கூடுதல் தொகை கட்ட நேரிடும்.

2. பெட்டியை எளிதாக அடையாளம் காண, பெட்டி வித்தியாசமான நிறத்தில் இருப்பது நல்லது. உங்கள் பெயர் முகவரியுடன் கூடிய ஒரு ஸ்டிக்கரை பெட்டியின் அடிப்பகுதியில் ஒட்டி விடுங்கள். ஸ்டிக்கர் கிழியாமல் இருக்குமாறு டேப் ஒட்டிக் கொள்ளுங்கள். உங்களுடைய பெட்டியைத்தான் எடுத்துச் செல்கிறீர்கள் என்பதற்கு இதுவே ஆதாரமாக இருக்கும். பெட்டியின் நிறத்தைப் பார்த்து பார்த்து வாங்கினாலும், ஒரே நிறத்தில், ஒரே மாடலில் பல பெட்டிகள் இருக்க வாய்ப்பிருப்பதால், பெட்டியின் கைப்பிடியில் கலர்

ரிப்பன் கட்டிக் கொள்ளலாம். இது மற்ற பெட்டிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும். ( உங்களுடைய ஒரு செட் துணிகளை, கேபின் பையில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்கள் செக்–இன் லக்கேஜ் சரியான நேரத்தில் திரும்பி கிடைக்காதிருக்கும் பட்சத்தில், இது ஒரு முன்னேற்பாடு மட்டுமே !).

3. Less Luggage more comfort என்பதை நினைவில் கொண்டு அத்தியாவசியமான குறைந்த பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்லுங்கள். சில சமயங்களில், ஹோட்டல் உட்பட்ட சில இடங்களில் நமது பையை நாமே தூக்கிச் செல்லும் நிலை உருவாகலாம் என்பதை நினைவில் வைத்து, பயணத்தின் போது நான்கு சக்கர வசதிகள் கொண்ட பெட்டிகளை எடுத்துச் செல்லுங்கள்.

4. நீண்ட நாட்கள் சுற்றுலாப் பயணமாக இருந்தால், ஒரு பெரிய பெட்டியை எடுத்துச் செல்வதற்கு பதில், இரண்டு சிறிய பெட்டிகளை எடுத்துக் கொள்வது உசிதம். கையாள்வது எளிது. இதில் ஒன்றை செக்–இன் லக்கேஜாகவும் மற்றொன்றை கேபின் லக்கேஜாகவும் உபயோகப்படுத்தலாம். முதல் பாதி நாட்களுக்குத் தேவையான எல்லா ஆடைகளை ஒரு பெட்டியிலும், மீதி நாட்களுக்குரிய ஆடைகளை இரண்டாவது பெட்டியிலும் வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல் குறைந்த நாட்கள் சுற்றுலாவிற்கு இரண்டு பேர் செல்வதென்றால், இரண்டு பேருக்கு ஒரு பெரிய பெட்டியை எடுத்துச் செல்வதற்குப் பதில் இரண்டு சிறிய பெட்டிகளை எடுத்துக் கொள்வது நல்லது. ஒரு பெட்டியில் இரண்டு பேருக்கு உண்டான முதல் பாதி நாட்களுக்கு தேவையான ஆடைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது பெட்டியில் பின்பாதி நாட்களுக்குத் தேவையான ஆடைகளை வைத்துக் கொள்ளுங்கள். இதனால் ஏற்படும் பலன்கள்: 1) நீண்ட தூர பயணமென்றால் ஒரு பெட்டியை பஸ்ஸிலேயே வைத்துக்கொள்ளலாம். 2) எல்லா பெட்டிகளை அடிக்கடி திறக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

5. நீங்கள் கொண்டு செல்லும் பெட்டிகளுக்கு இரண்டு செட் சாவிகளை கொண்ட பூட்டு போட்டு எடுத்துச் செல்வது அவசியம். சாவிகளை வெவ்வேறு இடத்தில் வைப்பது புத்திசாலித்தனம்.

6. ஊருக்குச் செல்லும்போது உங்கள் பெட்டியை புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். பெட்டியின் அளவு, பிராண்டு பெயர், நிறம் போன்றவைகளை குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டால், பெட்டி தொலைந்துவிட்டாலோ அல்லது உடைந்து விட்டாலோ அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்த முன்னெச்சரிக்கை மிகவும் பயனுள்ளது.

7. வழியனுப்ப வருபவர்கள் கூடவே ஒரு பையையும் எடுத்துச் செல்லலாம். சில பொருட்களை விமானத்தில் அனுமதிக்கவில்லை என்றால் அத்தகைய பொருட்களை அவர்களிடம் தந்துவிடலாம்.

8. உங்கள் கைப்பையில் வைத்துக் கொள்ளக் கூடிய பொருட்கள் : பாஸ்போர்ட் மற்றும் விசா, அவற்றின் நகல்கள், பணம், டிக்கெட், கிரெடிட் கார்டு, இன்ஷூரன்ஸ், அத்தியாவசியமான மாத்திரைகள், குறிப்புப் புத்தகம், விசில் மற்றும் முக்கியமான பொருட்கள். அவசியம் இருந்தால் 100 ml க்கு உட்பட்ட திரவ பொருட்கள்.
( விமானப் பயணத்தின்போது கைப்பையில் வைத்துக் கொள்ள அனுமதியில்லாத கத்தரிக்கோல், கத்தி, தனியாக உள்ள பாட்டரி செல், நெயில் கட்டர், சிகரெட் லைட்டர், ஷேவிங் ரேசர், ஜெல், லோஷன், பாடி ஸ்பரே போன்றவைகளை செக்–இன் லக்கேஜ்–ல் வைத்துக் கொள்ளலாம்.)

9. தினசரி பயண நிகழ்ச்சியின் ஒரு காப்பியை உங்கள் பெட்டியிலும் மற்றொன்றை உங்கள் கைப்பையிலும் வைத்திருங்கள். ஒருவேளை விமான நிலையத்தில் உங்கள் பெட்டி தொலைந்துவிட்டால், தினசரி பயண

நிகழ்ச்சியின் ஒரு காப்பியை ஏர்போர்ட் அதிகாரிகளிடம் கொடுத்து விடலாம். இப்படி செய்வதனால் அவர்களுக்கு எங்கே எந்த நேரத்தில் பெட்டியை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்பது தெரிய வரும்.

10. உங்கள் பெட்டிக்கு அடையாள கார்டு செய்கையில், அதில் உங்கள் தொலைபேசி எண்ணாக நம்மூர் நம்பரை மட்டும் கொடுக்காமல், வெளிநாட்டில் நாம் உபயோகிக்கும் நம்பரையும் கொடுக்கலாம். ஒருவேளை வெளிநாட்டில் பெட்டி தொலைந்துவிட்டால், தொடர்பு கொள்வதற்கு எளிதாக இருக்கும்.

## வெளிநாடு

1. நியூஸிலாந்து போன்ற சில நாடுகளுக்கு பழங்கள், தண்ணீர் பாட்டில், ஊறுகாய், தாவரங்கள், உணவுப் பொருட்கள் போன்றவைகளை கொண்டு செல்லக்கூடாது. எனவே, செல்லும் நாடுகளைப் பற்றி முன்னதாகவே நன்கு தெரிந்துக்கொண்டு அதற்கேற்ப செயல்பட்டால், விரும்பத்தகாத பின் விளைவுகளைத் தவிர்க்கலாம்.

2. எந்த நாட்டிற்கு செல்கிறீர்களோ, அந்த நாட்டின் தூதரகம், அதனுடைய தொலைபேசி எண் மற்றும் அதனுடைய விலாசம் போன்றவைகளை குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

3. எந்த நாட்டிற்கு செல்கிறோமோ, அந்நாட்டின் மின்சார வோல்ட்ஸ் என்ன என்பதை முன்னதாகவே தெரிந்துக் கொள்ளுங்கள். லாப்டாப், கேமிரா, செல்ஃபோன் சார்ஜ் செய்ய வசதியாக இங்கிருந்தே "Multipurpose Universal Adapter" கொண்டு செல்லுங்கள். அல்லது ஹோட்டல் வரவேற்பறையில் வாங்கி உபயோகப்படுத்தி மறக்காமல் திருப்பித் தரலாம் (சில ஹோட்டலில் கட்டணம் உண்டு).

4. நாம் செல்லும் நாடுகளில் கண்ணில் கண்டதையெல்லாம் புகைப்படம் எடுத்து மாட்டிக் கொள்ளாதீர்கள். சில நாடுகளில் அரசுக்குச் சொந்தமான

கட்டிடங்களைப் புகைப்படம் எடுக்க அனுமதியில்லை. எடுத்தால் சிறைத் தண்டனை கூட உண்டு. விமான நிலையத்தில் இமிக்ரேஷன், கஸ்டம்ஸ், பாதுகாப்பு சோதனை போன்ற இடங்களை புகைப்படம் எடுக்காதீர்கள்.

5. நீங்கள் போகும் இடங்களைப் பற்றிய செய்திகள், குறிப்புகள், சுற்றுலா நிகழ்ச்சி போன்றவற்றை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் தவறாமல் எல்லாவற்றையும் பார்க்க முடியும்.

6. நீங்கள் செல்லும் நாட்டைப் பற்றிய தட்பவெப்பநிலையை அறிந்து அதற்கேற்ப ஆடை அணிய திட்டமிட்டால் பயணம் இனிமையாகவும், சந்தோஷமாகவும் அமையும். தவிர, ரூபாய் மதிப்பு, நேர வித்தியாசம் போன்றவைகளையும் தெரிந்துக் கொள்ளுங்கள்.

7. நீங்கள் செல்லும் இடங்களில் குளிர் மிக அதிகமாக இருக்கும் பட்சத்தில் இங்கிருந்தே ஸ்வெட்டர், கிளவுஸ், ஜெர்கின்ல், காலுறை போன்றவற்றை வாங்கிக் கொண்டு செல்லுங்கள். அங்கே போய் கடையைத் தேடி அவதிப்பட வேண்டாம். அதிக விலை கொடுக்க வேண்டாம்.

8. எந்த நாட்டிற்கு செல்கிறீர்களோ, அந்நாட்டு கரன்சியை நம்முடைய ஊரிலுள்ள வங்கியிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட Money Exchanger–லோ மாற்றிக்கொள்ளுங்கள். உள்ளூர் தரகர்களிடம் அயல்நாட்டு கரன்சி வாங்கும்போது, கள்ள நோட்டு குறித்து மிக எச்சரிக்கையாக செயல்படவும். ஒருவேளை அந்நாட்டு கரன்சி இங்கே கிடைக்கவில்லை என்றால், அமெரிக்க டாலராக மாற்றிக் கொள்ளுங்கள். அமெரிக்க டாலரை உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் அந்நாட்டு கரன்சியாக மாற்ற இயலும்.

9. உங்கள் வெளிநாட்டுப் பயண தொடர்புள்ள எந்த படிவத்திலும் கையெழுத்திடுவதென்றால் உங்கள் கையெழுத்து பாஸ்போர்ட்டில் உள்ளபடியே இருக்கட்டும்.

## SIM

1. வெளிநாட்டுக்குச் செல்கையில் டூயல் சிம் மொபைல்களை கொண்டு செல்லுங்கள். ஒன்றில் நம்மூர் சிம்மையும், மற்றொன்றில் வெளிநாட்டில் உபயோகிக்கும் சிம்மையும் பொருத்திக் கொள்ளலாம். அநாவசியமாக இரண்டு செல் போன்கள் வேண்டாமே!

2. சிம் கார்டு வாங்குவதென்றால், ஒன்று நம் ஊரிலேயே சிறந்த சேவையை கொடுக்கும் நிறுவனம் எது என்று விசாரித்து, இன்டர்நேஷனல் சிம் கார்டு வாங்கிக் கொள்ளலாம். அல்லது எந்த நாட்டிற்கு செல்கிறீர்களோ அங்கேயே வாங்கிக்கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கான சிம் கார்டு வாங்கியிருக்கும் போது அதை Transit விமான நிலையத்திலோ அல்லது நமது நாட்டிலோ உபயோகிப்பதை தவிர்த்திடுங்கள். ஏனென்றால், ரோமிங் சார்ஜ் என்ற பெயரில் பில் அதிகமாகிவிடும். அதே போல் கப்பலில் பயணம் செய்யும்போதும் செல்போன் உபயோகிக்க வேண்டாம். சேட்டிலைட் மூலம் சிக்னல் வருவதால் கட்டணம் மிக மிக அதிகம். சிம் கம்பெனிக்காரர்கள் பெரும்பாலும் இதை தெரிவிப்பதில்லை. நீங்கள்தான் இதனை புரிந்துக்கொண்டு எச்சரிக்கையாக செயல்படவேண்டும்.

## GENERAL

1. விமான டிக்கெட், ஹோட்டல் புக்கிங், டூர் புக்கிங் போன்றவை உறுதியானதும், அந்த கன்ஃபர்மேஷன் தாள்களை நகல் எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

2. பயணத்திற்கு தயாராகும் போது தங்களது பெயர் பிரிண்ட் செய்யப்பட்ட ஸ்டிக்கர்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். தங்களது கேமிரா, I - Pod, லாப் டாப் ஆகியவைகளை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் தங்களது ஸ்டிக்கரை ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள்.

3. அதிகம் நடக்கவேண்டி இருக்கலாமாதலால், நடப்பதற்கு வசதியாக பிடிப்பு அதிகம் உள்ள தகுந்த காலணிகளை பயன்படுத்துங்கள். அழகைவிட வசதிக்கே முக்கியத்துவம் கொடுங்கள்.

4. பயணத்தின் போது புதிய ஆடைகளையோ காலணிகளையோ உபயோகிக்காதீர்கள். சில சமயம் ஒவ்வாமை, அரிப்பு போன்ற சிரமம் ஏற்படலாம்.

5. அல்ட்ரா வயலட் கதிர்களினால் கண்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, தரமுள்ள கருப்பு கண்ணாடியை எடுத்துச் செல்லுங்கள். அதுபோல சருமத்தைப் பாதுகாக்க தகுந்த லோஷன்களையும் எடுத்துச் செல்லுங்கள். LIP Guard அவசியம்.

6. மூக்குக் கண்ணாடி ஒன்றைக் கூடுதலாக வைத்துக் கொள்ளுங்கள்.

7. கேமிராவுக்கு எப்போதும் எக்ஸ்ட்ரா பாட்டரி மற்றும் மெமரி கார்டுகளை எடுத்துச் செல்லுங்கள். பல சமயங்களில், பல நாடுகளில் இப்பொருட்களின் விலை மிக மிக அதிகம்.

8. தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய மருந்து மாத்திரைகள் தவிர காய்ச்சல், வயிற்று வலி, இருமல், ஜலதோஷம், அலர்ஜி போன்றவைகளுக்கு மருத்துவரின் ஆலோசனையுடன், மருந்துகளையும் அவரின் பிரிஸ்கிரிப்ஷனையும் சேர்த்து எடுத்துச் செல்லுங்கள். அங்கே சென்று வாங்கிக் கொள்ளலாம் என்று நினைக்காதீர்கள். விலை அதிகமாக இருப்பதுடன், நம் மாத்திரைகள் அங்கே கிடைக்காமல் போகலாம். பயணம் குறுகிய காலமாக இருந்தாலும், சோம்பல் படாமல், எடுத்துச் செல்லுங்கள். யாருக்கு எப்போது என்ன நேரிடும் என்று யாராலும் சொல்ல முடியாது. மாத்திரைகளையெல்லாம் ஒரு Ziplock கவரில், பிரிஸ்கிரிப்ஷனுடன் உங்கள் கைப்பையில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மருந்துகள்

உங்களுக்கு அவசியப்பட வேண்டிய நிலை ஏற்படாவிட்டாலும், மற்றவர்களுக்கு உதவக்கூடும். இதைத் தவிர, செல்லும் நாட்டுக்குத் தகுந்தாற் போல் முன்னெச்சரிக்கையாக டி.டி (T.T), டைஃபாய்டு ஊசி போட்டுக் கொள்வதும் நல்லது. பயணத்தின் போது உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான், எல்லாவற்றையும் நன்கு ரசிக்க முடியும். நிறைய பணம் செலவழித்து பயணம் செல்வது அந்நாட்டை அனுபவித்துப் பார்க்கத்தான் என்பதை நினைவு கொள்ளுங்கள்.

9. ஒரு குறிப்பு புத்தகம் தயார் செய்து உடன் வைத்துக் கொள்ளுங்கள். அந்த குறிப்புப் புத்தகத்தில் குறைந்தப்பட்சம் கீழ்கண்டவை இருக்கட்டும்.:

i) பயணம் செய்யப் போகும் விமான எண், நாள், நேரம், எந்த டெர்மினல்.

ii) தினசரி பயண நிகழ்ச்சி (Tour programme).

iii) உடன் வருபவர்களின் பெயர், வயது மற்றும் புகைப்படம்.

iv) தங்கும் ஹோட்டலின் விலாசம் மற்றும் தொலைபேசி எண்.

v) அந்த ஊரில் உள்ள நண்பர்கள், உறவினர்களின் விலாசம் மற்றும் தொலைபேசி எண்.

vi) உங்கள் வீட்டு விலாசம், அவசர தொலைபேசி எண், அவசியத் தேவை என்றால் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் மற்றும் அவரின் தொலைபேசி எண்.

vii) பெட்டியின் விபரங்கள்.

viii) எந்த நாட்டிற்கு செல்கிறோமோ, அந்நாட்டின் இந்திய தூதரகத்தின் விலாசம் மற்றும் தொலைபேசி எண்.

10. உங்கள் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் நீங்களாகவே தயாரித்த அடையாள அட்டையையும் எப்போதும் கைப்பையிலேயே வைத்திருங்கள்.

| Recent Passport Size Photo | | |
|---|---|---|
| | Name | : ____________ |
| | Address | : ____________ |
| | State | : _____ Country _______ |
| | Phone | : 00 - 91 - Std Code - Number |
| | Mobile | : 00 - 91 Number |
| | D.O.B | : Date (Month in letters) Year Eg. 08 July 1989 |
| | Blood group: | ____________ |

Specific Health Condition :
I am an acuteSugar / Heart Patient

Passport No. : _______ Date of Expiry : ________
Date of Issue : _______ Place of Issue : ________

IN CASE OF EMERGENCY, PERSONS TO BE CONTACTED

| | | | |
|---|---|---|---|
| Name | : __________ | Name | : __________ |
| Address | : __________ | Address | : __________ |
| State | : __________ | State | : __________ |
| Country | : __________ | Country | : __________ |
| Ph. No | : 00 - 91 - Std Code - No. | Ph. No | : 00 - 91 - Std Code - No. |
| Mobile | : 00 - 91 Number | Mobile | : 00 - 91 Number |
| E.mail | : __________ | E.mail | : __________ |

11. 36 மணி நேரம் முன்னதாகவே, உங்கள் போர்டிங் பாஸை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏர்லைன்ஸ் வெப்சைட்டிற்கு சென்று, ஆன்லைன் மூலம் நீங்கள் செக்–இன் செய்து போர்டிங் பாஸை பிரிண்ட் அவுட் எடுத்துக் கொள்ளலாம். இப்படி செய்வதனால் நிறைய நேரம் மிச்சமாகிறது. 3 மணி நேரம் முன்னதாகவே செல்ல வேண்டும் என்று கூட சில சமயம் அவசியமில்லை. நீண்ட வரிசையில் நிற்கவும் அவசியமில்லை. நேரே Fast Bag Drop Counterக்கு சென்று, உங்கள் பெட்டியை ஒப்படைத்துவிட்டு, பிறகு செக்யூரிட்டி செக்கிற்கு சென்றுவிடலாம். இந்த ஏற்பாடு சில விமான கம்பெனிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

12. முக்கியமான ஆவணங்கள் – அதாவது பாஸ்போர்ட், விசா, டிக்கெட்ஸ், இன்சூரன்ஸ் போன்றவைகளை ஸ்கேன் செய்துக் கொண்டு உங்கள் மெயிலில் வைத்துக் கொள்ளுங்கள். பென் டிரைவிலும் ஒரு காப்பி வைத்து கூடவே வைத்திருங்கள். ஏதாவது ஒரு சமயத்தில் உங்களுக்கு உபயோகமாக இருக்கலாம்.

✦ ✦ ✦

## 6. டிராவல் இன்ஷூரன்ஸ்

1. வெளிநாட்டுக்கு செல்லும்முன், நாம் இன்ஷூரன்ஸ் வாங்கிக் கொள்ளலாம். ஏதேனும் எதிர்பாராத விதமாக அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், அதை வைத்து தக்க நஷ்ட ஈடு பெற்றுக் கொள்ளலாம்.

2. *கீழ்கண்ட காரணங்களுக்காக டிராவல் இன்ஷூரன்ஸ் எடுப்பது உசிதம் ;*

   ✷ எதிர்பாராவிதமாக விமானம் ரத்து செய்யப்பட்டு விட்டால்

   ✷ பெட்டிகள் தொலைந்துவிட்டால்

   ✷ அந்நிய தேசத்தில் பாஸ்போர்ட்டோ, பர்ஸோ தொலைந்துவிட்டால்

   ✷ ஏதேனும் விபத்து ஏற்பட்டால்

   ✷ விமானம் / கப்பல் கம்பெனி அல்லது டிராவல் ஏஜென்சி திவால் ஆகிவிட்டால்

   ✷ அவசர மருத்துவ சூழ்நிலை

   ✷ செல்லும இடத்தில் தீவிரவாதிகளால் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால்

   ✷ சுனாமி, புயல் போன்றவைகளால் தங்கும் இடத்திலிருந்து வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டால்

3. ஆனால், நீங்கள் கட்டும் இன்ஷூரன்ஸ் பிரிமியம் தொகை ஒவ்வொரு காரணத்திற்காகவும் மாறுபடலாம் என்பதை நினைவுக் கொள்ளுங்கள்.

4. மூத்த குடிமக்களுக்கு பிரிமியம் தொகை சற்றே அதிகமாக இருக்கக் கூடும்.

5. டிராவல் இன்சூரன்ஸில் உங்கள் பெயர், பாஸ்போர்ட் நம்பர் போன்ற விவரங்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

6. சந்தேகம் ஏதும் இருப்பின், நன்றாக விசாரித்து விளக்கம் பெறுங்கள்.

✦ ✦ ✦

## 7. ஏறும் விமான நிலையம்

1. சர்வதேசப் பயணம் என்றால் விமான நிலையத்திற்கு குறைந்தது மூன்று மணி நேரம் முன்னதாகவே சென்று விடுங்கள்.

2. விமான நேரம் 25.07.2013 காலை 00:30 என்று குறிப்பிட்டிருந்தால் 24.07.2013 அன்று இரவு 09:30 மணிக்கே ஆஜராகிவிட வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 00:00 என்பது அடுத்த நாளாக கணக்கிடப்படுகிறது என்ற எளிய விஷயத்தைக் கூட பதட்டம் காரணமாக சிலசமயம் சிலர் மறந்துவிட வாய்ப்புண்டு.

3. விமான நிலைய அறிவிப்புப் பலகையை பார்த்து உங்கள் விமானம் சரியான நேரத்திற்கு புறப்படுகிறதா, தாமதமாக புறப்பட உள்ளதா, ரத்து செய்யப்பட்டுவிட்டதா போன்ற விபரங்களை அறிந்துக் கொள்ளுங்கள். மேலும் விபரம் தேவைப்பட்டால் அங்குள்ள HELP DESK-ஐ அணுகி விபரம் தெரிந்துக்கொள்ளுங்கள்.

4. உங்கள் டிக்கெட் மற்றும் பாஸ்போர்ட்டை காண்பித்து முதலில் விமான நிலையத்தில் நுழைகிறீர்கள். பெட்டிகளை X-Ray செய்தபிறகு, ( சில நாடுகளில் இது அவசியமிருக்காது ), உங்களுடைய ஏர்லைன்ஸ் கவுண்டருக்கு சென்று பாஸ்போர்ட் மற்றும் டிக்கெட்டை காண்பித்து செக்-இன் லக்கேஜை அவர்களிடம் ஒப்படைத்து போர்டிங் பாஸ் வாங்கிக் கொள்ளுங்கள். மறக்காமல் உங்கள் கேபின் லக்கேஜுக்கும், கைப்பைக்கும் டேக் (Tag) போட்டுக் கொள்ளுங்கள். இமிக்ரேஷன் (Departure Card) ஐ வாங்கிக் கொள்ளுங்கள்.

5. செக்-இன் லக்கேஜை அவர்களிடம் ஒப்படைக்கும் போது இரண்டு ஸ்டிக்கர்கள் - ஒன்றை பெட்டியிலும், மற்றொன்றை போர்டிங் பாஸ் பின்புறமும் ஒட்டுவார்கள். போர்டிங் பாஸை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். இறங்கும் இடத்தில் உங்களது பெட்டியை சரியாக அடையாளம் கண்டு கொண்டு எடுப்பதற்காகவும், பெட்டியை வெளியே எடுத்துச்

செல்லும் போது உங்களது பெட்டியைத்தான் கொண்டு செல்கிறீர்கள் என்பதை அங்குள்ள காவலாளியிடம் நிரூபிப்பதற்காகவும், ஒருவேளை உங்கள் பெட்டி தொலைந்து போயிருந்தாலோ அல்லது வேறு யாரோ தவறுதலாக கொண்டு சென்றிருந்தாலோ அதைப்பற்றி புகார் செய்ய ஏதுவாகவும் இந்த ஸ்டிக்கர்கள் உங்களுக்கு உதவுகின்றன.

6. இமிக்ரேஷன் போன்ற எந்த படிவத்தை பூர்த்தி செய்தாலும், உங்களது ஊரின் பெயரை சுருக்காமல், அதாவது, திருச்சி, கோவை என்று எழுதாமல் திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் என்று பாஸ்போர்ட்டில் உள்ளவாறு முழுதாக எழுதவும். அதே போல் போன் நம்பர் எழுதும்போது, நாட்டின் ISD Code ( இந்தியாவிற்கு 0091) உங்கள் ஊரின் STD Code இவைகளை சேர்த்து எழுதவும். உதாரணமாக திருச்சிராப்பள்ளி தொலைபேசி எண் 24622xx என்று இருந்தால், 0091-431-24622xx என்று எழுதுங்கள். மொபைல் நம்பராக இருந்தால் 0091 - 94430 - 434xx என்று குறிப்பிடுங்கள்.

7. இமிக்ரேஷன் சோதனையின் போது கறுப்புக் கண்ணாடி அணியாதீர்கள். விசாவிற்கு எந்த புகைப்படம் கொடுத்தீர்களோ, அந்த தோற்றம், கூடிய வரையில் மாறுபடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இமிக்ரேஷனில் நிற்கும் போதோ அல்லது உயர் அதிகாரிகளிடம் பேசும் போதோ வாயில் சூயிங்கம் மெல்லாதீர்கள். அது அவர்களுக்கு சில நேரங்களில் எரிச்சல் உண்டு பண்ணும். என்ன கேள்வி கேட்கிறார்களோ அதற்கு தகுந்த விடையை அளித்தால் போதும். அவர்களுக்கு புரியும்படி பேசுங்கள். அநாவசியமான விவாதங்கள் வேண்டாம்.

8. (Departure card)ஐ பூர்த்தி செய்து அதை இமிக்ரேஷன் கவுன்டரில் கொடுத்து உங்கள் பாஸ்போர்ட்டில் சீல் வாங்கிக் கொள்ளுங்கள். நம் நாட்டிலிருந்து வெளியே செல்ல அனுமதி அது தான். அதன்பின் பாதுகாப்பு பரிசோதனை ( Security Check) செய்து, போர்டிங் பாஸில் குறிப்பிடப்

பட்டிருக்கும் கேட்டுக்கு சென்று விடுங்கள். உங்கள் விமானத்திற்கு செல்லும் இடம் அதுதானா என்பதை உறுதி செய்த பிறகே ஷாப்பிங் அல்லது வேறு இடங்களுக்குச் செல்லுங்கள். ஆனால் எங்கு சென்றாலும், உங்கள் பாஸ்போர்ட் மற்றும் போர்டிங் பாஸ்–ஐ கூடவே எடுத்துச் செல்லுங்கள்.

9. பாதுகாப்பு சோதனைப் பிரிவில், கைப்பைகளை SCAN செய்யும்போது அதிலிருக்கும் லாப்டாப், காமிரா, செல்போன், பெல்ட் போன்றவைகளை தனியாக எடுத்து வைக்கக் கூறுவார்கள். சோதனை முடிந்தபின் வெளியேறும் போது பதட்டத்தின் காரணமாக, அவசரத்தில் அதை எடுக்க மறக்காதீர்கள். கூட வருபவர்கள், ஒருவருக்கொருவர் ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

10. போர்டிங் பாஸ் வாங்கிய பிறகு, அதில் குறிப்பிட்டிருக்கும் நேரம் மற்றும் கேட் எண்ணை அடிக்கடி அறிவிப்பு பலகையில் சரிபார்த்துக் கொள்ளுங்கள். சில சமயங்களில் விமானம் புறப்பாடு நேரம் மற்றும் கேட் நம்பரை மாற்றி இருப்பார்கள். விமானத்தில் ஏறும் முன், இது உங்களுடைய விமானம் தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதில் தவறில்லை.

11. இரண்டு கைகளிலும் கனமான பெட்டிகளை வைத்துக் கொண்டு, எஸ்கலேட்டர் உபயோகிப்பதை தவிர்த்திடுங்கள். எஸ்கலேட்டரில் பயணிப்பது பயமாக இருந்தால், படிகளையோ அல்லது லிஃப்ட்டுகளையோ உபயோகியுங்கள்.

12. விமான நிலையத்திலோ அல்லது விமானத்தில் சந்திக்கும் அறிமுகம் இல்லாத நபர்களிடம் அநாவசியமாக பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் முகவரி, மொபைல் எண் போன்றவற்றை அவசியம் இல்லாமல் தர வேண்டாம். அவர்கள் கொடுக்கும் எந்த சாமான்களையும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டாம். தின்பண்டங்கள் ஏதாவது தந்தால் நாசூக்காக தவிர்த்திடுங்கள்.

13. பெரிய விமான நிலையங்களில், புகைப்பிடிப்பவர்களுக்காகவே பிரத்யேகமாக சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. புகைப் பிடிப்பவர்கள் இங்கே மட்டும்தான் புகைப்பிடிக்க இயலும்.

14. சக்கர நாற்காலியில் வருபவர்கள், கேட்டுக்கொண்டால் LIFT போன்ற சில பிரத்யேக வசதிகளை ஏற்படுத்தி அவர்களை விமானத்தில் ஏற்றச் செய்வார்கள். இதற்கு தனிக் கட்டணம் செலுத்த நேரிடலாம். விமானத்திலும் விமான நிலையத்திலும் இவர்களுக்கு என்று எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் கூச்சப்படாமல், தைரியமாக இந்த வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பயணத்தை இனிமையாக ஏற்படுத்திக் கொள்ளலாம்.

✦ ✦ ✦

## 8. விமானப் பயணம்

1. உங்கள் உடையின் மேல் ஒரு ஓவர் கோட் (Jacket) அணிந்துக்கொண்டால் அதன் பாக்கெட்டுகளில், பயணத்திற்கு தேவையான பல பொருட்களை ஆங்காங்கே வைத்துக் கொள்ளலாம்.

2. ஏர் சிக்னஸ் உள்ளவர்கள் விமானம் புறப்படுவதற்கு 2 மணி நேரம் முன்னதாகவே மருத்துவர் பரிந்துரை செய்த மாத்திரைகளைப் உட்கொண்டு விடுங்கள்.

3. விமானத்தில் பயணம் செய்யும்போது, உங்கள் கேபின் லக்கேஜ்ஜை உங்கள் கண் பார்வையிலேயே முன்புறம் வைத்திருங்கள். பின்புறம் வைக்க வேண்டாம். விமானத்தில் கூட சிலசமயம் திருட்டு போவதுண்டு.

4. விமான பயணத்தின் போது, கழுத்து வலி உள்ளவர்கள் Neck Pillow உபயோகிக்கலாம். காதுவலி உள்ளவர்கள், வெர்டிகோ (Vertigo) பிரச்சினை உள்ளவர்கள் வீட்டிலிருந்தே பஞ்சை அல்லது Ear plug-ஐ உடன் எடுத்துச் செல்லலாம். சில சமயங்களில் விமானத்தில் கிடைக்காது. பயணத்தின் போது சூயிங்கம் மெல்லலாம். கால்களுக்கு தகுந்த காலுறை அணிவது நல்லது.

5. விமானம் புறப்படும்போதும், இறங்கும்போதும் கட்டாயமாக சீட் பெல்ட் அணிய வேண்டும். புறப்படுவதற்கு முன்பே சீட் பெல்ட்டை எப்படி எதற்காக அணிய வேண்டும் என்பதை விமானப் பணிப்பெண் பயணிகளிடம் விவரிப்பார். மேலும் அதன் செய்முறையை உங்கள் எதிரே இருக்கும் டி.வியிலும் செய்து காட்டப்படும். ஒருவேளை அதன் செய்முறை சரியாக புரியாவிட்டால், அருகில் இருப்பவரிடமோ அல்லது பணிப்பெண்ணிடமோ

கூச்சப்படாமல் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம். சில சமயங்களில் மேகக் கூட்டங்களிடையே விமானம் செல்லும்போது, சீட் பெல்ட் அணிய சொல்லி அறிவிப்பார்கள். அப்போதும் சீட் பெல்ட் அணிய வேண்டும்.

6. பெரும்பாலான சர்வதேச விமானங்களில் நீங்கள் உட்கார்ந்திருக்கும் முன்னிருக்கையின் பின்புறம் ஒரு டி.வி இருக்கும். அந்த டி.வியின் ரிமோட் உங்கள் கைப்பிடியின் அடியில் இருக்கும். சத்தம் வெளியே கேட்கக் கூடாது என்பதற்காக ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஹெட் செட்டுகள் கொடுத்திருப்பார்கள். உங்களுக்கு விருப்பமுள்ள மொழிப் படங்களை பார்த்தோ அல்லது பாடல்களையோ கேட்டோ ரசித்துக் கொள்ளுங்கள். வீடியோ கேம்ஸ்களைக் கூட விளையாடிக் கொள்ளுங்கள். பயணம் அலுப்புத் தட்டாமல் இருக்க இந்த வசதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.

7. நீங்கள் படிக்க ஏதுவாக, அதிக வெளிச்சம் தேவைப்பட்டால், உங்கள் தலைக்கு மேலே உள்ள விளக்கை பட்டன் மூலமாகவோ அல்லது உங்களிடம் உள்ள ரிமோட் மூலமாகவோ இயக்கிக் கொள்ளுங்கள்.

8. விமானங்களில் புகைப்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. கழிவறையிலும் கூட புகைப்பிடிக்க அனுமதி இல்லை.

9. விமானத்தில் பயணிப்பதற்கு முன்னும், பயணத்தின் போதும் அளவாக சாப்பிடுங்கள். இலவசமாக தருகிறார்கள் என்று அதிகமாக சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். முடிந்தவரை அசைவ உணவைத் தவிர்த்திடுங்கள். நிறைய தண்ணீர் அருந்துங்கள்.

10. பெரும்பாலான சர்வதேச விமானங்களில் மதுபானங்கள் வழங்கப் படுகின்றன. ( இலவசமாகக் கொடுக்கிறார்களே என்று எண்ணி மிதமிஞ்சி குடித்து கண்டபடி பேசியும், வாந்தி எடுத்தும் அசிங்கப் படுத்தாதீர்கள்). சில பட்ஜெட் விமானங்களில் இலவசமாக வழங்கப்படுவதில்லை. அத்தகைய விமானங்களில் காசு கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்.

11. விமானத்தில் பயணம் செய்யுமபோது சில பேருக்கு வாந்தி வர நேரிடலாம். அப்படி இருக்கையில் விமானத்திலேயே உங்கள் இருக்கையின் எதிர்ப்புறத்திலேயே வாமிட்டிங் பேக் வைத்திருப்பார்கள். அதை உபயோகித்துக் கொள்ளலாம். பணிப்பெண்ணின் உதவியையும் நாடலாம்.

12. எல்லா விமானங்களிலும் கழிப்பறை வசதி உண்டு. அவைகளை சுத்தமாக வைத்திருப்பது ஒவ்வொரு பயணியின் கடமை. விமானம் புறப்படும்போதோ ( Take off ) மற்றும் தரை இறங்கும்போதோ ( Landing) கழிப்பறையை உபயோகிக்க அனுமதிக்க மாட்டார்கள்.

13. தொலைதூரப் பயணமென்றால் விமானத்திலேயே அவ்வப்போது உள்ளேயே நடப்பதும் அல்லாமல் கீழ்கண்ட சிறிய பயிற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.

✤ இரண்டு கால்களையும் உயர்த்தி, வட்டமைப்பில் கால்களை சுழற்றுங்கள். ஐந்து முறை Clockwise ஆகவும், ஐந்து முறை Anti-clockwise ஆகவும் சுழற்றுங்கள்.



✤ உங்கள் இடப்பக்க தோளை வலது கையால் பிடித்து, உங்கள் வலது முழங்கை முட்டியை உங்கள் இடது கையால் அழுத்திக் கொள்ளுங்கள். 15 வினாடிகளுக்கு இரண்டு முறை செய்யுங்கள். இதே செய்முறையை வலப்பக்க தோளுக்கும் பின்பற்றுங்கள்.

✤ பாதங்களை தரையில் வைத்து உங்கள் காலின் முன்பகுதியை மேலே உயர்த்துங்கள். பின்னர் முன்பகுதியை தரையில் வைத்து குதிகாலை உயர்த்துங்கள். இவ்வாறாக 5 தடவை செய்யுங்கள்.



✤ தோளை முன்னும் பின்னும் வட்டமாக சுழற்றுங்கள். தோளை உயர்த்தி இறக்குங்கள். இவ்வாறு 5 தடவை செய்யுங்கள்.

✤ மிதமாக முன்பக்கம் குனியுங்கள். இரண்டு கைகளையும் கோர்த்து ஒரு கால்முட்டியை பிடித்து உங்கள் நெஞ்சு வரை கொண்டு செல்லுங்கள். 15 வினாடிகள் அப்படியே வைத்திருந்த பிறகு, அடுத்த காலுக்கும் இதே செய்முறையை பின்பற்றுங்கள். மூன்று முறை செய்யுங்கள்.



✤ இரண்டு கால்களையும் தரையில் வையுங்கள். மெதுவாக உங்கள் இரண்டு கைகளால், உங்கள் கனுக்கால் முட்டியை தொடுங்கள். சில நிமிடம் அப்படியே இருந்து பின்னர் உங்கள் பழைய நிலைக்கு வாருங்கள்.



✤ வலது காதை வலது தோள் பக்கம் சாய்த்து, உங்கள் தலையை இடது தோள் பக்கம் வரை பின்புறம் சுழற்றுங்கள். அதைத் தொடர்ந்து வலது தோள் பக்கம் வரை முன்புறம் சுழற்றுங்கள். ஒரு வட்டம் போல் இதே போல 10 முறை தொடர்ந்து செய்யுங்கள்.

14. நீங்கள் கொண்டு செல்லும் எலக்ட்ரானிக் பொருட்களை, விமானம் புறப்படும் போதும், பின்னர் தரையிறங்கும் போதும் உபயோகிக்காதீர்கள். I - Podல் பாட்டு கேட்கும்போது மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் Head phone-ல் கேட்கலாம்.

15. விமானத்தில் அவ்வப்போது அறிவிக்கப்படும் தகவல்களை கவனமாக கேளுங்கள்.

16. விமானத்திலேயே இமிக்ரேஷன் ( Arrival Card) கார்டு தருவார்கள். அதை சரியாக பூர்த்தி செய்து பாஸ்போர்ட்டில் ஜெம் கிளிப் சொருகி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். எந்த விமான நிலையத்தில் இறங்குகிறீர்களோ அங்குள்ள இமிக்ரேஷன் கவுண்டரில் கொடுத்து பாஸ்போர்ட்டில் சீல் வாங்கிக் கொள்ளுங்கள். இந்த சீல் இருந்தால்தான் நாம் அந்த நாட்டிற்குள் நுழைகிறோம் என்று பொருள்.

17. விமானத்திற்கு எரிபொருள் நிரப்பும் பொருட்டு, சில சமயங்களில் இடைப்பட்ட விமானநிலையத்தில் நிறுத்தக்கூடும். கிடைக்கும் நேரம் அதிகமாக இருக்கும் பட்சத்தில், சில சமயம் பயணிகளை விமான நிலையத்திற்குள் உள்ளே அனுமதிக்கப்பட்டு ஒரு தனி இடத்தில் இருக்கச் செய்வார்கள். வெளியே செல்ல இயலாது. அப்படிப்பட்ட சமயங்களில் கைகால்களை நீட்டி மடக்கி ரிலாக்ஸ் செய்துக் கொள்ளலாம்.

✦ ✦ ✦

## 9. இறங்கும் விமான நிலையம்

1. வழிகாட்டி பலகைகளை (Sign Board) ஆங்காங்கே நிறைய வைத்திருப்பார்கள். அதனைச் சரியாக தொடர்ந்து சென்றாலே யாருடைய உதவியும் இன்றி செல்ல வேண்டிய இடங்களுக்குச் சரியாக செல்லலாம்.

2. விமானத்தில் இருந்து இறங்கிய பிறகு, நேரே இமிக்ரேஷன் பகுதிக்கு செல்லுங்கள். உங்களுக்குரிய கவுண்டரை நன்கு அறிந்த பின்னர் வரிசையில் நில்லுங்கள். சிலசமயம் ரிடர்ன் டிக்கெட் கேட்பார்கள். அதை தயாராக வைத்திருங்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதட்டப்படாமல் தெளிவாக பதில் கூறுங்கள். Tourist Visa on Arrival வாங்குவதென்றால் வாங்கிக் கொள்ளுங்கள்.

   ( Transit பயணியாக இருக்கும்பட்சத்தில், முன்னதாகவே, புறப்படும் விமான நிலையத்திலேயே போர்டிங் பாஸ் வாங்கியிருந்தால் இமிகிரேஷன் கவுண்டரில் பாஸ்போர்ட்டில் சீல் வாங்கிக்கொண்டு பிறகு செக்யூரிட்டி செக் வழியாக நாம் அடுத்த நாட்டிற்குச் செல்லும் விமானத்தின் புதிய கேட்டிற்குச் செல்லுங்கள். விமான நிலைய அறிவிப்பை அவ்வப்போது சரி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய செக்–இன் பெட்டிகள் நேரடியாகவே அந்த விமானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்).

3. பின்னர் Baggage claim இடத்திற்குச் சென்று உங்களுடைய சரியான செக்–இன் பெட்டிகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

4. பின்னர் கஸ்டம்ஸ் கிளியரன்ஸ் செய்து கொண்டு விமான நிலையத்திற்கு வெளியே செல்லுங்கள்.

5. விமானத்திலோ அல்லது விமானநிலையத்திலோ எந்த ஒரு பொருளையும் தொலைத்துவிட்டால், விமானநிலையத்தில் “Lost and Found” என்ற கவுண்டர் இருக்கும். அங்கு சென்று உங்கள் போர்டிங் பாஸை காண்பித்து, தொலைந்த பொருளின் அடையாளங்களை சொல்லி உங்கள் பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

✦ ✦ ✦

## 10. ஹோட்டலில் தங்குதல்

1. ஹோட்டலில் தங்கும்போது, கூட வரும் நண்பர்கள் மற்றும் குழுத்தலைவர் மற்றும் வழிகாட்டியின் அறை எண்களை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது அவசரம் என்றால் அவர்களை சுலபமாக தொடர்பு கொள்ள இயலும்.

2. உங்கள் பெயர் அல்லது இனிஷியலைக் கொண்ட சிறிய ஸ்டிக்கரை உங்கள் அறைக் கதவில் வெளிப்பக்கம் ஒட்டிக்கொண்டால். குழுவாகச் செல்கையில் யார் எந்த அறையில் இருக்கிறார்கள் என்பதை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். ( அறையை காலி செய்யும்போது மறக்காமல் ஸ்டிக்கரை எடுத்து விடவும்).

3. ஹோட்டல் அறைக் கதவுகள் கார்டு அல்லது சாவிமூலம் திறப்பதாக இருக்கும். அதேபோல் பாத்ரூம் கதவுகளில் ஆட்டோமேடிக் பூட்டு இருக்கும். ஒருமுறைக்கு இருமுறை அதன் செயல்பாடுகள் பற்றித் தெரிந்த பின்னரே உபயோகிக்க ஆரம்பியுங்கள். உடன் வருபவர்களுக்கும் குழந்தைகளுக்கும் புரியும்படியாக சொல்லித் தாருங்கள்.

4. அறைக்குள் நுழைந்தவுடன், உங்கள்அறையில் உள்ள தொலைபேசி சரியாக வேலை செய்கிறதா என்பதையும் அதன் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் செல்போன், காமிரா போன்றவைகளை சார்ஜ் செய்து கொள்ளுங்கள்.

5. ஹோட்டல் வரவேற்பு தொலைபேசி எண்ணை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தற்செயலாக பாத்ரூமில் மாட்டிக் கொண்டால் அங்கு உள்ள போன் மூலம் உதவி கேட்கலாம். தனியாக இருக்கையில், அறைக் கதவை சாத்திவிட்டால் டாய்லட் கதவை தாழ் செய்வது அவசியமில்லை.

6. சில ஹோட்டல்களின் அறையில் தின்பண்டங்கள், குளிர்பானங்கள் வைத்திருப்பார்கள். இவற்றில் சில இலவசம். மற்றப் பொருட்களுக்கு விலை இருக்கும். ( இதன் விலை வெளியில் விற்பதை விட இரண்டு மடங்காக இருக்கும் ). அதனால் எது இலவசம், எதற்கு விலை உண்டு என்பதை தெரிந்து கொண்ட பின்னரே உபயோகியுங்கள்.

7. அறையிலிருக்கும் தொலைக்காட்சி பெட்டியில் சில சேனல்கள் கட்டணத்திற்குரியதாக இருக்கும். இது தெரியாமல் அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து, அறையைக் காலி செய்யும்போது பில்லைப் பார்த்து அதிர்ச்சி அடையாதீர்கள்.

8. சில ஹோட்டல்களின் கழிப்பறையில் தண்ணீருக்கு பதில் பேப்பர் வைத்திருப்பார்கள். பேப்பர் உபயோகித்து பழக்கம் இல்லாதவர்கள் கைவசம் ஒரு பாட்டில் அல்லது MUG எடுத்துச் செல்வது நல்லது.

9. குளிக்கும்போது பாத் டப்பில் உள்பக்கம் ஸ்கிரீன் வரும்படி வைத்துக் கொண்டு குளித்தால், தண்ணீர் வெளியே வராது. அறையில் உள்ள கார்ப்பெட் நனைந்து விட்டால் அபராதம் கட்ட நேரிடும்.

10. ஆண்கள் ஷேவ் செய்கையில், ரத்தம் வந்துவிட்டால், அதை ஹோட்டல் துண்டில் துடைத்துவிடாதீர்கள். Tissue Paper உபயோகியுங்கள். வெள்ளைத் துண்டில் ரத்தக்கறைப் பட்டுவிட்டல் அபராதம் கட்டவும் நேரிடலாம்.

11. சில ஹோட்டல் அறையில் லாக்கர் வசதி இருக்கும். (சில சமயம் இதை உபயோகிப்பதற்கு கட்டணம் இருக்கலாம்). இதன் அடையாள எண்ணாக பிறந்த தேதியை தவிர்த்து தங்களுக்கு எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய எண்ணை வைக்கலாம். பாஸ்போர்ட்டை உள்ளே வைப்பதற்கு முன்னால், சாதாரண பொருட்களை உள்ளே வைத்து அதன் செய்முறையை நன்கு சோதித்துப் பார்த்த பின்னரே பாஸ்போர்ட்டை வைக்கவும். எண்ணை தவறாக பதிவு செய்தால், சில லாக்கர்களில் மூன்று தடவை மட்டுமே முயற்சிக்க முடியும். அதன் பின்னர் லாக்கரை இயக்க முடியாது என்பதனால் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இரண்டு பேர் செல்கையில் மற்றவரிடம் எண்ணை தெரிவிக்கலாம்.

12. பலசமயம் காலை உணவு தங்கும் ஹோட்டலிலே தரப்படும். பஃபேயில் வரிசையை பின்பற்றுங்கள். உணவு வகைகள் நிறைய வைத்திருப்பார்கள். தேவையானதை மட்டும் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். வீணாக்காதீர்கள். பழங்கள், பிஸ்கட்கள், ஜூஸ் போன்றவைகளை வெளியே எடுத்துச் செல்வது நாகரிகம் அல்ல. பாட்டிலில் தண்ணீர் பிடிப்பதாக இருந்தால் கூட வெயிட்டரிடம் கேட்டு வாங்கிக் கொள்வது நல்ல பழக்கம்.

13. சில ஹோட்டல்களில் தங்கும்போது பாஸ்போர்ட்டை வாங்கி வைத்துக் கொள்வார்கள். வெளியில் செல்வதாக இருந்தால் பாஸ்போர்ட்டின் நகலை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். அறையை காலி செய்யும்போது மறக்காமல் ஹோட்டலிலிருந்து பாஸ்போர்ட்டை வாங்கிக் கொள்ளுங்கள்.

14. எந்த ஹோட்டலில் தங்குகிறோமோ அந்த ஹோட்டலின் விசிட்டிங் கார்டை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். வெளியே செல்லும்போது ஒரு வேளை குழுவினரை பிரிந்து வழி தவறிவிட்டால், இந்த கார்டை வைத்து ஹோட்டலுக்கு திரும்பி வந்து விட ஏதுவாக இருக்கும்.

15. விடியற்காலை 05.00 மணிக்கு விமானப் பயணம் என்றால் நீங்கள் அங்கே மூன்று மணி நேரம் முன்னதாகவே அதாவது 02.00 மணிக்கு விமான நிலையத்தில் இருக்க வேண்டும். ஹோட்டலிலிருந்து விமான நிலையத்திற்கு சுமார் ஒரு மணி நேர பிரயாணம் என்றால், நீங்கள் 01.00 மணிக்கு ஹோட்டலிலிருந்து புறப்பட வேண்டும். குளித்து ஆயத்தம் செய்வதற்கு 45 நிமிடங்கள் ஆகலாம் என்றால் நள்ளிரவு 00.15 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். ஹோட்டலில் வேக்-அப் கால் வசதி பொதுவாக உண்டு. ஆனால் இதை முழுவதுமாக நம்புவதற்கு இல்லை. மிகவும் எளிதாக வெரி ஸாரி என்று சொல்லிவிடுவார்கள். உங்களுக்கும் அனாவசியமான டென்ஷன். அதனால் 00.15 மணிக்கு வேக் அப் கால் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு உங்கள் செல்போனில் 00.20 மணிக்கு அலாரம் செட் செய்து கொள்ளுங்கள்.

*மூன்று முன்னெச்சரிக்கைகள் :*

1. உங்கள் அறையில் உள்ள போன் வேலை செய்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. உங்கள் செல் போனில் அந்த நாட்டின் நேரத்தை சரி செய்து கொள்ளுங்கள்.
3. செல்போனில் சார்ஜ் உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

✦ ✦ ✦

## 11. Credit / Debit CUM ATM Card

1. வெளிநாட்டுக்குச் செல்லும் முன் உங்கள் Debit / Credit கார்டை அங்குள்ள வர்த்தக நிறுவனங்களில் உபயோகிக்க ஏதுவாக உங்கள் வங்கியில் முன்னதாகவே சொல்லி ஆக்டிவேட் செய்து கொள்ளுங்கள். இதற்கு முன்னதாக உங்கள் கார்டில் இந்த வசதி இருக்கிறதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

2. பல இடங்களில் கிரெடிட் கார்டு மூலம் பரிவர்த்தனை செய்யும் நடைமுறை வழக்கத்தில் உள்ளது. ஆகையால் உங்கள் கிரெடிட் கார்டு facility கணிசமான தொகைக்கு இருக்குமாறு ஏற்பாடு செய்துக் கொள்ளுங்கள். நம்மூர் பணத்தை அந்நாட்டு கரன்சியாக மாற்ற இயலாவிட்டால், கிரெடிட் கார்டுகளை உபயோகப்படுத்தலாம். பேருந்தில் தொடர்ச்சியாக பிரயாணம் செய்யும் போது, டாய்லெட்டுக்காக சில இடத்தில் நிறுத்துவார்கள். அங்குள்ள கடைகளில் காபி குடிக்கும்போது, அந்த நாட்டு கரன்சியையே உபயோகப்படுத்தச் சொல்வார்கள். அந்த கரன்சி நம்மிடம் இல்லையென்றால் கிரெடிட் கார்டுகளை உபயோகப்படுத்தலாம்.

3. வெளிநாட்டில் கிரெடிட் கார்டுகளையோ, டெபிட் கார்டுகளையோ உபயோகிப்பதில் நிறைய முறைகேடுகள் நடப்பதால் அவற்றை முடிந்தவரை உபயோகிக்காமல் இருப்பது உசிதம் எனக் கருதப்படுகிறது.

4. உங்கள் கார்டை அறிமுகம் இல்லாத நபர்களிடம் எக்காரணத்தைக் கொண்டும் கொடுக்க வேண்டாம்.

5. ஒருவேளை உங்கள் DEBIT/CREDIT கார்டு வெளிநாட்டில் தொலைந்து விட்டால், அதை உடனே டீஆக்டிவேட் செய்வதற்காக, ஒரு எண்ணிற்கு

நாம் அழைத்து சொல்ல வேண்டும். பெரும்பாலும் இந்த எண்ணை கார்டின் பின்பக்கம் கொடுத்திருப்பார்கள், அல்லது அந்த குறிப்பிட்ட வங்கியிடம் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம். இதை மறக்காமல் உங்கள் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள். அவசர காலத்தில் இந்த முன்னெச்சரிக்கை உதவலாம்.

6. கப்பலிலோ அல்லது CRUISE மூலம் செல்லும்போதோ, ஷாப்பிங் செய்துவிட்டு கிரெடிட் கார்டை நீட்டினால், அந்த கடைக்காரர் ஸ்வைப் செய்துவிட்டு, உங்கள் கார்டு இங்கே ஆக்டிவேட் ஆகவில்லை என்று சொல்லி, பொருளுக்கு உண்டான தொகையை ரொக்கமாக பெற்றுக் கொண்டு விடுவார். நமது ஊருக்கு திரும்பி வந்து, வங்கி கணக்கை பரிசீலித்தால், அத்தொகை கழிக்கப்பட்டு விட்டிருக்கும். மறுபடியும் கப்பலை தொடர்புக் கொண்டு பணத்தை திரும்பப் பெறுவது எளிதான செயல் அன்று. அப்படிப்பட்ட இடங்களில் ரொக்கமாகக் கொடுத்தே வாங்குங்கள். பில்லை பத்திரமாக வைத்திருங்கள்.

7. பயணம் முடிந்து திரும்பியதும் உங்கள் ATM கார்டின் ரகசிய பின் நம்பரை மாற்றி விடுங்கள். வெளியூர்களில் பயணம் செய்து ATM-ல் பணம் எடுப்பவர்கள் அவசியம் இதைச் செய்தாக வேண்டும். தற்போது ATM-ல் அதிக அளவில் பணம் திருட்டு முறைகேடு நடப்பது வாடிக்கையாகி விட்டது.

✦ ✦ ✦

## 12. பெண்களுக்கான சில யோசனைகள்

1. மிகவும் குறைந்த நகைகளை அணிந்து செல்லுங்கள். வைரத்தோடு, மற்றவர்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய கல்பதித்த ஆடம்பர நகைகள் வேண்டாம்.

2. சேலை கட்டியப் பெண்களுக்கு வெளிநாட்டினர் மிகவும் மரியாதை தருகின்றனர். அதனால் இயன்றவரை நம் ஊர் ஆடைகளில் வளைய வாருங்கள், நம்முடைய தேசத்துக்கு பெருமை சேருங்கள்.

3. தகுந்த துணையின்றி தனியாக செல்வதை தவிர்த்திடுங்கள். ஒரு வேளை தனியே செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் உங்கள் கைப்பையுடன் செல்போனையும் எடுத்துச் செல்லுங்கள்.

4. கைப்பையில் எப்போதும் போலீஸ் விசில் வைத்திருங்கள். ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால், மற்றவர்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் அதை பலமாக ஊதுங்கள். (அவசியமில்லாமல் ஊதி சங்கடத்திற்கு உள்ளாகாதீர்கள்).

5. முகத்துக்கு மஞ்சள் பூசும் பெண்கள் ஹோட்டலில் கொடுக்கும் துண்டில் முகத்தைத் துடைத்து கறையாக்கினால் அபராதம் கட்ட நேரிடும். அதனால் மஞ்சள் பூசிக் குளிக்கும் பழக்கம் உள்ளவர்கள் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

6. வெளிநாட்டுக்கு செல்லும்போது நெற்றியில் இட்டுக்கொள்ளும் பொட்டுகளை நிறைய எடுத்துச் செல்லுங்கள். வெளிநாட்டினர் நம்மைப் பார்த்து அதிகம் வியப்பது இந்த பொட்டைப் பார்த்துதான். சங்கோஜப் படாமல் சில குழந்தைகள் விரும்பிக் கேட்கக் கூடும். அவர்களுக்கு நம் பொட்டை தந்து சந்தோஷப் படுத்தலாம்.

7. புடவை அணிந்த பெண்கள் எஸ்கலேட்டரில் செல்லும்போது புடவை எதிலும் சிக்காமல் பார்த்து ஜாக்கிரதையாக இருங்கள். குழந்தைகளை உங்கள் கைப்பிடியில் இருந்து விட்டு விடாதீர்கள். எஸ்கலேட்டரில் செல்வது பயமாக இருந்தால் படியிலேயே செல்லுங்கள்.

✦ ✦ ✦

## 13. ஷாப்பிங்

1. ஊரிலிருந்து புறப்படுகையில் ஒரு காலி பையை எடுத்துச் செல்லுங்கள். அப்படி செய்யாமல் விட்டுவிட்டு, வாங்கிய பொருள்களைப் போடுவதற்கென்றே ஒரு புதிய பையை வாங்கி காசை வீணடிக்காதீர்கள்.

2. கண்ணில் கண்ட எல்லா பொருட்களையும் வாங்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். நம் ஊரில் கிடைக்காத சில அரிய பொருட்களை மட்டுமே வாங்க முடிவு செய்யுங்கள்.

3. சின்ன சின்ன கடைகளில் பொருட்களை வாங்கும்போது, பேரம் பேசி குறைந்த விலைக்கு வாங்க முடியும். அப்படி பேரம் பேசி வாங்கும்போது அதற்குரிய சில்லறை மட்டுமே கொடுங்கள். அதிகமான பணத்தை கொடுத்து மீதி கேட்டால் அவர்கள் முதலில் சொன்ன விலையை எடுத்துக் கொள்வார்கள். அனாவசியமான விவாதத்துக்கு ஆளாக வேண்டாம். அதே போல் பேரம் பேசி வாங்கிய பொருளும் அவர்கள் கொடுக்கும் பொருளும் ஒன்று தானா என்று சரி பார்க்கத் தவறாதீர்கள். சில நாடுகளில் சில சமயம் சில கடைகளில் தரக்குறைவான பொருட்களை மாற்றி கொடுத்து விடுவார்கள்.

4. பெரிய கடைகளில் பொருட்களின் விலை மிக அதிகமாக இருக்கும் காரணத்தினால், நினைவுப் பொருட்களை (Souvenirs) சாதாரண கடைகளிலேயே வாங்கலாம். Showcase-ல் வைக்கும் பொருட்களுக்கு மிக உயர்ந்த தரம் அவசியமில்லையே !

5. சில நாடுகளில் சில வகை பாரம்பரிய கலைப் பொருட்களை அந்த நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதியில்லை. அப்படிப்பட்ட பொருட்களை வாங்கும் பொழுது, இவை பற்றிய உண்மைகளை முன்னதாகவே தெரிந்து கொண்டு செயல்பட்டால் பின்னால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கலாம். அப்படிப்பட்ட பொருட்களை ஆசைப்பட்டு வாங்கும்போது பில் வாங்கி வைத்துக் கொண்டால் புறப்படும் விமான நிலையத்தில் Customs பிரச்சனை இருக்காது.

6. சில கடைகள் சிறியதாக இருக்கும் பட்சத்தில் நீங்களோ அல்லது உங்கள் தோளில் மாட்டியிருக்கும் பையோ, அங்குள்ள எந்தப் பொருளையும் தட்டி விடாமல் மிகவும் ஜாக்கிரதையாக உள்ளே சென்று வாருங்கள். சில சமயங்களில் கிரிஸ்டல்களோ, கண்ணாடி பொருட்களோ கீழே விழுந்துவிட்டால், அதற்குண்டான முழு விலையையும் நீங்களே கட்ட நேரிடும். அவர்கள் சொல்வதுதான் விலை.

7. சில பெரிய கடைகளில் சில பொருட்களுக்கு “வரிவிலக்கு” (Tax Refund) என்ற அறிவிப்பை வைத்திருப்பார்கள். பொருள் வாங்கிய பிறகு ரசீதை பத்திரமாக வைத்து, புறப்படும்போது விமான நிலையத்திற்கு சற்று முன்னதாகவே சென்று அதற்குரிய கவுண்டரில் ரசீதைக் காண்பித்து, “வரிவிலக்கு”-க்கான பணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

8. எதற்கெடுத்தாலும் நமது நாட்டின் பணத்தின் மதிப்போடு ஒப்பிட்டு பார்க்காதீர்கள். ஒரு காப்பி – ரூ. 250 ஆகவும், 1/2 லிட்டர் தண்ணீர் பாட்டில் ரூ. 500 ஆகவும் இருக்கலாம். ஒப்பிட்டுப் பார்த்து அதிர்ச்சியடைந்து பிறகு ஒன்றுமே வாங்க மாட்டீர்கள். சில அத்தியாவசியப் பொருட்களை வாங்கும்போது கணக்குப் பார்க்காதீர்கள்.

9. குழுவாகச் செல்கையில், ஷாப்பிங்கிற்காக ஓர் இடத்தில் நிறுத்தி, திரும்ப அதே இடத்துக்கு வரச் சொல்வார்கள். அந்த இடத்தை நன்றாக ஞாபகப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். புகைப்படமும் எடுத்துக் கொள்ளலாம். அந்த சாலையின் பெயரை உங்கள் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

10. குழுவாகச் செல்கையில் பல பேர் ஒரு குறிப்பிட்ட பொருளை வாங்கினால், தள்ளுபடி அதிகம் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

11. சாலையோரம் விற்கும் உணவுப் பொருட்களை வாங்கும்போது, தரமானதா என்று பார்த்து வாங்குங்கள். வெளிநாட்டுப் பயணத்தில் உடல் ஆரோக்கியமாக இருந்தாலே பயணம் இனிதாக அமையும்.

12. அந்தந்த நாட்டினுடைய இயற்கைக் காட்சிகள், கலாச்சாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கும CD/DVD-களை வாங்கிக் கொள்ளலாம். பின்பு வீடு வந்ததும் நண்பர்களிடமும், குடும்பத்தாரிடமும் போட்டுக் காட்டலாம். இது வாழ்நாள் முழுவதும் ஒரு ஞாபகார்த்தப் பொருளாக அமையும்.

✦ ✦ ✦

## 14. வெளிநாட்டில் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்

1. ஒரு நாட்டிற்கு சென்றவுடன் அந்த நாட்டின் நேரத்தை உங்கள் கடிகாரத்தில் (செல்போன் மற்றும் காமிராவில் கூட) மாற்றிக் கொள்ளுங்கள். இரண்டு பேர் செல்கையில் ஒருவர் அந்த நாட்டின் நேரத்தையும் மற்றவர் நம் நாட்டின் நேரத்தையும் கடிகாரத்தில் வைத்துக் கொண்டால் சுலபமாக ஒப்பீடு செய்யலாம். நம் ஊருக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொள்கையில், இந்த ஏற்பாடு வசதியாக இருக்கும்.

2. உங்களது பெயரை யார் கேட்டாலும் பாஸ்போர்ட்டில் உள்ளபடியே சொல்லுங்கள். உதாரணமாக உங்களது பெயர் எழிலரசி என்றும், பாஸ்போர்ட்டில் கனகசபாபதி எழிலரசி என்றும் குறிப்பிட்டிருந்தால், கனகசபாபதி எழிலரசி என்றே எப்போதும் சொல்லுங்கள்.

3. எல்லா பணத்தையும் ஒருவரே வைத்துக்கொள்ளாமல் உடன் வருபவர்களிடமும் கொடுத்து வைக்கலாம். பெரிய தொகைக்கான நோட்டுக்களாக இல்லாமல் சில்லரையாகவும் வைத்துக் கொள்ளுங்கள். கழிவறை உபயோகத்துக்கோ, காபி வாங்குவதற்கோ அல்லது சின்ன சின்ன ஷாப்பிங் செய்வதற்கோ வசதியாக இருக்கும்.

4. எல்லா பணத்தையும் மணிபர்சில் வைத்து, அதை பேண்ட் பின் பக்கம் (பிக்பாக்கெட் அடிக்க ஏதுவாக) வைக்க வேண்டாம்.

5. சுற்றுலா பயணிகள் அதிகமாக நடமாடும் இடங்களில் திருட்டு, வழிப்பறி, போன்றவை நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்குமென்ற காரணத்தினால், உங்கள் உடைமைகளை மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளுங்கள்.

6. வெளியே ஷாப்பிங் செய்யும்போது மற்றவர்களுக்கு தெரியும்படி அல்லது அவர்கள் கவனத்தை ஈர்க்கும்படி பணத்தை எண்ண வேண்டாம் அல்லது உபயோகிக்க வேண்டாம்.

7. நம்மூர் பணத்தை அந்தந்த நாட்டின் கரன்சியாக மாற்றும்போது ஹோட்டலிலோ அல்லது விமான நிலையத்திலோ மாற்றினால், கொடுக்கப்படும் விலை அதிகமாக இருக்கக்கூடும். ஆகையால் கடைத்தெருவில் உள்ள Money Exchanger- லோ அல்லது வங்கியிலோ மாற்றுவது சிக்கனம்.

8. ஒரு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்பு அந்த நாட்டின் கரன்சிகளை கூடியவரையில் அங்கேயே செலவழித்து விடுங்கள். அல்லது US டாலராக மாற்றி விடுங்கள். ஏனென்றால் மறுபடியும் நம்மூர் பணத்திற்கு மாற்றும்போது வாங்கிய விலையைவிட கொடுக்கும் விலை மிக குறைவாக இருக்கும். சில சமயம் மாற்ற இயலாது. முக்கியமாக அந்த நாட்டின் சில்லறை காசுகளை அங்கேயே செலவழித்து விடுங்கள் அல்லது தர்மம் செய்துவிடுங்கள்.

9. பேருந்தில் பயணம் செய்யும்போது கண்களை விரித்து இயற்கைக் காட்சிகளை ரசியுங்கள். அதை விட்டுவிட்டு பேருந்தில் ஏறியவுடனேயே தூங்கி விடாதீர்கள். இந்த அருமையான பயணம் மறுபடியும் அமையுமா எனத் தெரியாது. பேருந்து எண்ணை குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

10. பேருந்தில் குப்பை போடுவதோ, சாப்பிடுவதோ வேண்டாம். பேருந்து பயணம் நீண்டதாக இருந்தால், எளிய உணவை எடுத்துக்கொள்ளுங்கள்.

11. டாக்ஸியில் செல்லும்போது அதன் எண்ணை குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

12. உங்களது பயணத்தின் போது பயண வழிகாட்டி அல்லது குழுத் தலைவரின் தொலைபேசி எண்ணை குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டால், ஒருவேளை எங்காவது தவறினாலும் இது கைகொடுக்கும்.

13. வெளிநாட்டில் எல்லாவற்றிற்குமே வரிசை முறைதான். ஷாப்பிங் முடித்து பணம் கட்டுவது முதல் கழிப்பறைக்காக காத்திருக்கும் வரை இப்படி எல்லாவற்றிற்குமே வரிசைதான். நீங்களும் அவர்களின் பழக்கத்தின்படியே வரிசையை பின்பற்றுங்கள். அப்படி வரிசையில் நிற்கும்போது தங்களை மற்றவர்கள் மோதுவதோ, உரசுவதோ அவர்கள் விரும்புவதில்லை. அதேபோல் அவர்கள் அருகில் தும்முவதையோ இருமுவதையோ விரும்ப மாட்டார்கள்.

14. வெளிநாட்டினர் அடிக்கடி நன்றி கூறுகிறார்கள். அந்தப் பழக்கத்தை நாமும் கடைபிடிப்போம்.

15. அந்நிய நாட்டில் இருக்கும்பொழுது, யாரையுமே நமது மொழியில் கேலி செய்யாதீர்கள். குறிப்பாக, குழுவாக செல்கையில். இது மிகவும் தவறான செயல்.

16. வெளிநாட்டினருடன் சேர்ந்து புகைப்படம் எடுக்க விரும்பினாலோ அல்லது அவர்களின் குழந்தைகளையோ, செல்லப் பிராணிகளையோ தொட்டுப் பார்க்க ஆசைப்பட்டாலோ அவர்களின் அனுமதி பெற்று செய்யுங்கள். அவர்களின் விருப்பமில்லாமல் செய்வதை அவர்கள் விரும்புவதில்லை.

17. பேருந்திலோ அல்லது ஹோட்டலிலோ இடம் பிடிப்பதற்காக உங்கள் பாஸ்போர்ட் வைத்திருக்கும் பையை வைத்துவிட்டுச் செல்லாதீர்கள். நீங்கள் திரும்பி வரும் முன் உங்கள் பை காணாமல் போக வாய்ப்புண்டு. சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

18. ஹோட்டல் ரூமை காலி செய்து பேருந்தில் ஏறுவதற்கு முன், உங்கள் பெட்டிகளை எல்லாம் பொதுவாக ஒரு இடத்தில், ஹோட்டல் லாபியிலோ அல்லது பேருந்திற்கு முன்போ வைக்கச் சொல்வார்கள். பின்னர் பேருந்தின்

ஓட்டுநர் எல்லா பெட்டிகளையும் பேருந்தில் ஏற்றுவார். இப்படிச் செய்கையில் பெட்டிகளை தவற விட வாய்ப்புண்டு. அதனால் ஒன்றுக்கு இரண்டு முறை உங்கள் பெட்டி பேருந்தில் ஏற்றப்பட்டுவிட்டதா என்பதை கூடவே இருந்து கண்காணிப்பது புத்திசாலித்தனம்.

19. ரெகுலராக விடியற்காலையில் வாக்கிங் செல்பவர்கள், வெளிநாட்டிலும் வாக்கிங் செல்ல நினைத்தால், மெயின்ரோடு அல்லது ஆள் நடமாட்டம் உள்ள இடங்களை தேர்வு செய்யுங்கள். என்ன வேண்டுமானாலும் நடக்க வாய்ப்புண்டு. அப்படி வாக்கிங் செல்கையில் ஹோட்டல் கார்டு மற்றும் கொஞ்சம் பணத்தையும் கூடவே வைத்திருங்கள். அதேபோல் சாலையோரம் நின்றிருக்கும் கார்களை தொட்டுவிடாதீர்கள். Theft Alarm அடித்து ஊரையே கூட்டிவிடும்.

20. வெளிநாட்டில் பல இடங்களில் பணியாற்றுபவர்கள் தாங்கள்செய்யும் வேலைக்கு டிப்ஸ் வாங்கும் பழக்கமுண்டு என்பதை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

21. பொதுவாக வெளிநாட்டினருக்கு இந்தியர்கள் மீது மூன்று விஷயத்தில் நம்பிக்கை இல்லை.

    1. சரியான நேரம் கடைப்பிடிக்காமை
    2. பேருந்துகளில் குப்பை போடுவது
    3. சாலை ஒழுக்கத்தை கடைப்பிடிக்காமை

    இதை நாம் கவனத்தில் கொண்டு மேற்கொண்ட தவறுகளை நாம் செய்ய வேண்டாம்.

✦ ✦ ✦

## 15. சர்க்கரை நோயாளிகள் கவனம் கொள்ள வேண்டியவை

1. உங்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளை Zip Lock பையில் போட்டு ( செக்-இன் பேக்கேஜில் வைக்காமல் ), கைப்பையில் வைத்துக்கொள்ளுங்கள். இன்ஸுலின் ஊசி போட்டுக் கொள்பவர்கள், அதை தகுந்த இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

2. கஸ்டம்ஸ் பரிசோதனைக்காக டாக்டரின் மருந்து சீட்டை உடன் வைத்துக் கொள்ளுங்கள்.

3. உங்களது விமானம் எப்பொழுது புறப்படும், எந்த நேரத்திற்கு போய் சேரும் மற்றும் நேர வித்தியாசத்தை மிகச் சரியாக தெரிந்து கொண்டு அதற்கு தகுந்தாற்போல் உணவு பழக்கங்களை மேற்கொள்ளுங்கள்.

4. நீங்கள் சுத்தமான வெஜிடேரியனாக இருந்தால், நீங்கள் பயணம் செய்யும் விமானத்தில், உங்களுக்குத் தேவையான உணவு வகைகள் கிடைக்காமல் போகலாம். ஆகவே முன்னேற்பாடாக உங்களுக்குத் தேவையான உணவுகளை கைப்பையில் வைத்திருங்கள். பாதுகாப்பு சோதனையின் போது அதிகாரிகள் ஆட்சேபித்தால் உங்கள் உடல்நிலை பற்றி எடுத்துச் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

5. விமானத்தில் அவர்கள் தரும் உணவு பிடிக்கவில்லை என்றாலும் அல்லது ஒத்துக்கொள்ளாது என்றாலும் நீங்கள் எடுத்துச் செல்லும் உணவை கூச்சப்படாமலும், மற்றவர்களைப்பற்றி கவலைப்படாமலும் சாப்பிடுங்கள்.

6. நீண்ட தூர பயணமாக இருந்தால் உணவு இடைவேளை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

7. பயணத்தின் போது கூடியவரையில் விரதம் வேண்டாம். எக்காரணத்தை கொண்டும் சாப்பிடாமல் இருக்காதீர்கள். பலசமயம் Low sugar ஆபத்தானது. கைவசம் எப்போதும் சாக்லேட் இருக்கட்டும். லோ சுகரின் பொருட்டு மயக்கம் வந்தால், உடனே சாக்லேட்டை வாயில் போட்டுக் கொள்ளுங்கள்.

8. பயணத்தின் போது அவசியம் ஏற்பட்டால் உங்கள் ரத்தத்தின் குளுக்கோஸ் அளவை நீங்களாகவே பரிசோதிப்பது நல்லது.

9. பயணத்தின் போது ஏற்படும் அநாவசியமான டென்ஷனைத் தவிர்க்க, மெல்லிய இசையை ஐ-பாடில் கேளுங்கள்.

10. உட்கார்ந்துக்கொண்டே செய்யக்கூடிய சில எளிய யோகா பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

11. பயணத்தின்போது எவ்விதமான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்கும்பொருட்டு உங்கள் உடம்பை நீங்கள்தான் பத்திரமாக கவனித்துக் கொள்ள வேண்டும்.

✦ ✦ ✦

## 16. தாயகம் திரும்பிய பிறகு

1. சுற்றுலாவில் எடுத்த புகைப்படங்களை ஒரு செட் பிரிண்ட் போட்டு ஆல்பமாகத் தயாரியுங்கள். அதன் கீழே தேதி, இடம், அதன் சிறப்பு போன்றவற்றையும் குறித்து வையுங்கள். புகைப்படங்களை கம்ப்யூட்டரில் ஏற்றி நண்பர்களுக்கு மெயில் அனுப்பலாம். பேஸ்புக்கிலும் போஸ்ட் செய்யலாம்.

2. நீங்கள் வாங்கி வந்த ஞாபகார்த்த பொருளை, பெயர், நாடு, தேதி குறிப்பிட்டு Showcase-ல் பார்வைக்காக வைக்கலாம். ( மனம் எப்போதாவது சோர்வடைந்தால் அவைகளைப் பார்த்து புத்துணர்ச்சி அடையுங்கள்).

3. நீங்கள் போய் வந்த விபரங்கள், அந்த இடங்கள்பற்றிய குறிப்புகள், வாங்கிய போஸ்ட் கார்ட்ஸ், ரூம் கார்டுகள், அந்நாட்டில் வாங்கிய புத்தகங்கள், மற்றும் டூர் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையம் ஒரு File-ல் போட்டு பராமரியுங்கள். எதிர்காலத்தில் இந்நாடுகளுக்கு செல்ல விரும்பும் உங்கள் குழந்தைகளுக்கு உதவியாக இருக்கும்.

4. வெளிநாட்டில் நாம் பார்த்து அனுபவித்த நல்ல விஷயங்களை, அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சி செய்வோம்!
   - i) எல்லாவற்றிலும் வரிசை முறை. வரிசையில் பொறுமையாக காத்திருத்தல்
   - ii) சாரி, நன்றி, எக்ஸ்கியூஸ் மீ, போன்ற வார்த்தைகளை அடிக்கடி உபயோகித்தல்
   - iii) சாலை ஒழுக்கத்தை கடைப்பிடித்தல்
   - iv) கண்ட இடத்தில் எச்சில் துப்பாமல் இருத்தல்
   - v) எங்கும் சுத்தம் எதிலும் சுத்தம்
   - vi) வாகனம் ஓட்டும்போது அடிக்கடி ஹார்ன் உபயோகிக்காமல் இருத்தல்.

5. சென்று வந்த நாட்டுடன் நம் நாட்டை எந்த விதத்திலும் ஒப்பிட்டுப் பேசி குறை கூறி சலித்துக் கொள்ளாதீர்கள். நம்மிடமும் போற்றத்தக்க பாரம்பரியம், பண்டையக் கலாச்சாரம், நுண்கலைகள் போன்ற பல உள்ளன. நம்மை நாமே தாழ்த்திப் பேசாமல் நம் நாடு உயர்வதற்கு நாமும் ஒரு வழிகாட்டியாக இருக்கலாமே!

✦ ✦ ✦

## 17. சில இணைப்புகள்

## 17.1 விமானத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்கள்

*இந்திய விமான நிலைய ஆணையக் குழுமம் தடை செய்யப்பட்ட பொருள்களின் பட்டியல் (கேபின் லக்கேஜ்)*

| | |
|---|---|
| கத்திகள் | பொம்மை வகை ஆயுதங்கள் |
| கத்தரிக்கோல் | தீயணைப்பு கருவிகள் |
| சிகரெட் லைட்டர் | ஒளிரக் கூடிய தன்மை துப்பாக்கிகள் |
| சவர பிளேடு | கோலப்பட்டைகள் / தடிகள் |
| சிறிய அளவிலான அம்பு | துப்பாக்கி லைட்டர்கள் |
| விளையாட்டு மட்டைகள் | கந்தகப் பவுடர் |
| தொழில்முறை உபகரணங்கள் | சுத்தியல் |
| நுண் அமில மின்கல அடுக்கு | கையெறிக் குண்டு |
| தையல் ஊசிகள் | கைக் கோடாரி |
| வீட்டு உபயோக வெட்டுக் கருவிகள் | ஹாக்கி மட்டைகள் |
| துப்பாக்கி ரக குண்டுகள் | வேட்டைக் கத்திகள் |
| மிளகுத்தூள் தெளிப்பான் | உறைபனிக் கோடாரி / உறைப்பனிக் குத்தூசி |
| சிறிய கைத்துப்பாக்கி | கனரக கருவிகள் |
| பிளாஸ்டிக் வெடி மருந்து | கட்டியக் கோல் |
| பில்லியர்ட்ஸ் விளையாட்டு குச்சிகள் | யுத்த வகை கருவிகள் |
| சிறிய மின் துளைப்பான் | மாமிச வெட்டும் கருவிகள் |
| சிறிய மீன் ரம்பம் | வெடி மருந்துகள் |
| போலி ஆயுதங்கள் | தானியங்கி ஆயுதங்கள் |
| சுழல் துப்பாக்கி | கோடாரி |
| துப்பாக்கி | பேஸ் பந்து மட்டைகள் |
| பிரகாசிக்க கூடிய பொருட்கள் | காற்றடங்கிய தொப்பிகள் |
| SCUBA வகை கத்திகள் | வில் மற்றும் அம்புகள் |
| பட்டாக் கத்தி | பெட்டி வெட்டும் கருவிகள் |
| திருப்புளி | பித்தளை முட்டிகள் |
| குறி தவறாத துப்பாக்கி | காற்றமுத்த துப்பாக்கிகள் |
| பனி சறுக்கு விளையாட்டு உபகரணங்கள் | திருகாணி தக்கைகள் |
| ஈட்டித் துப்பாக்கி | கிரிக்கெட் மட்டை |
| அதிரத் தன்மை துப்பாக்கி | நீளமான கம்பிகள் |
| நீள சவரக்கத்திகள் | பலவீனப்படுத்தக் கூடிய வேதிய மற்றும் |
| ஸ்பின் வகை துப்பாக்கி | வாயுப் பொருட்கள் |
| உடைவாள் | டைனமைட் |
| கண்ணீர் புகை குண்டுகள் | மிளகாய்தூள் |

✦ ✦ ✦

## 17.2 Departure Card - மாதிரிப்படிவம்



DC7 2429995

UL

**DEPARTURE CARD.**

Please write in CAPITALS only. One character in one box as shown below. Do not write across the lines. Leave a box blank for space.

| A | B | C | D | E | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

1a. Name (**as in passport**) Leave one box blank after every part of the name/initial

1b. Sex (put '√' in box)

Male Female

2. Nationality

3. Date of birth (DD/MM/YY)

4a. Passport Number

4b. Date of issue (DD/MM/YY)

5a. Date of boarding (DD/MM/YY)

5b. Flight Number

5c. Port of final destination

6. Occupation (put √ in appropriate box)

Doctor, Business, Employed, Media, Lawyer, Government, Sports Person, Other

7. Purpose of visit - for Indian nationals only (put √ in appropriate box)

Tourism, Business, Transit, Official, Employment, Education

Conference, Social, Medical Treatment, Pilgrimage, Sports, Other

8. Address in India

Telephone number

IMMIGRATION STAMP

Signature of passenger

✦ ✦ ✦

## 17.3 Arrival Card - மாதிரிப்படிவம்

**ARRIVAL CARD FOR PASSENGERS**

A 08 14308963

Please write in CAPITALS only. One Character in one box as shown below. Do not write across the lines. Leave one box blank for space.

| A | B | C | D | E | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

1. Name (as in passport) Leave one box blank after every part of the name/initial

2. Sex (tick ✓ appropriate box) ☐ Male ☐ Female

3. Nationality

4. Date of Birth (DD/MM/YY)

5. Country of Residence

6. NRI/PIO/OCI Status (tick ✓ appropriate box) ☐ NRI ☐ PIO ☐ OCI ☐ None

7. PIO/OCI Card No., if any

8. Passport Number

9. Date of Issue (DD/MM/YY)

10. Flight Number

11. Port of Boarding

12. Date of Arrival (DD/MM/YY)

13. Countries visited in last 6 days

14. Address in India

15. Telephone No.

**To be filled in by Indians only**

16. Does your Passport carry an ECR stamp? (tick ✓ appropriate box) ☐ Yes ☐ No

17. Whether employed overseas (tick ✓ appropriate box) ☐ Yes ☐ No

18. If answer is yes to 17, reason for return (tick ✓ appropriate box) ☐ Completion of Employment ☐ Others

**To be filled in by foreigners (including PIO/OCI) and NRIs**

*19. Visa Number

*20. Date of Expiry (DD/MM/YY)

*21. Type of Visa

22. Expected date of Departure (DD/MM/YY)

23. Purpose of visit (tick ✓ appropriate box)

☐ Business ☐ Transit ☐ Official ☐ Employment ☐ Education ☐ Conference

☐ Visit Friends/Relatives ☐ Medical /Health ☐ Religion/Pilgrimage ☐ Leisure/Holiday ☐ Sport ☐ Others

*Not to be filled by NRIs

Signature of Passenger

Immigration Stamp

**CUSTOMS**

ON ARRIVAL HAND OVER THIS PART OF THE CARD TO THE CUSTOMS OFFICER IN INDIA WHILE LEAVING THE AIRPORT / CHECKPOST

1. Name in full ____________________
2. Flight No. ____________________
3. No. of checked in baggage(s) __________ 4. No. of hand baggage(s) __________
5. Total value of dutiable goods being imported ____________________
6. (a) Are you carrying any plants/seeds/fruits/flowers/vegetables/bulbs/other planting materials ? Yes/No

   (b) Are you carrying any meat & meat products/dairy products/live or ornamental fish/poultry/poultry products ? Yes/No

Signature of the passenger ____________________

* NRI - Non Resident Indian

OCI - Overseas citizen of India

PIO - Person of Indian origin

## 17.4 Check List

1. Passport + Gem clip / pin + 2 recent passport size photos + Visa
2. Tickets (Flight / Train ) etc. and xerox copy
3. Travel Insurance and xerox copy
4. Three xerox copies of first & last page of passport & visa
5. Prescribed ID card + self designed ID card + visiting card
6. Currency / US dollars, Credit / Debit cards
7. Hand book containing details of local guide, Hotel, Tour leader, Luggage size, brand, colour, Embassy Address & Phone No. etc.
8. Medicines with Doctor's prescription
9. Camera with spare battery, memory card and charger
10. Cell phone (with dual SIM), I-Pod, Laptop with chargers
11. Multi purpose Universal Adapter
12. Necessary minimum dresses
13. Toilet kit
14. Torch light and small umbrella
15. Whistle
16. Extra small bag + plastic bag / waste cloth
17. Locks & keys
18. Pen
19. Power glass (with spare ), sun glass
20. Sunscreen lotion & lip guard
21. Name stickers
22. Water bottle
23. Earplug / cotton / socks for flight journey
24. Biscuits, Chocolates for sugar patients
25. Small knife

✦ ✦ ✦

## 17.5 Documents Necessary for the process of Visas

Visa Interview is a complete Biometric Test; hence please make sure that there are No Mehendies, Tattoos and any Scars on the Hands / Palms at the time of interview.

**Mandatory Documents :**

| | | |
|---|---|---|
| 1. | Original passport ( 6 months validity ) | Original + 1 Copy |
| 2. | Old Passports ( if any ) | Original |
| 3. | Application form to be duly signed | Original |
| 4. | Photographs: 3UK spec, 3 Schengen Spec (Glossy finish) | ---- |
| 5. | Covering letter to the consulates (format enclosed) | Original |
| 6. | I.T. returns (SARAL) for last three years | Original + 1 Copy |
| 7. | Updated Bank Statement for last six months | Original + 1 Copy |
| 8. | Fixed Deposits and any other savings | Original + 1 Copy |
| 9. | Property Documents | Original + 2copies |

**If Employed**

| | | |
|---|---|---|
| 1. | Appointment order | Original + 1 Copy |
| 2. | Salary slip for last three months | Original + 1 Copy |
| 3. | Leave sanctioned letter mentioning the purpose of leave | Original + 1 Copy |

**If Businessmen:**

| | | |
|---|---|---|
| 1. | Covering letter to the consulates in Business letter head | Original |
| 2. | Certificate of Registration | Original + 1 Copy |
| 3. | Renewal slip | Original + 1 Copy |

| | | |
|---|---|---|
| 4. | Memorandum of Association | Original + 1 Copy |
| 5. | Articles of Association | Original + 1 Copy |
| 6. | Partnership Deed if Partnership Firm | Original + 1 Copy |
| 7. | Company Bank Statement - last 6 months | Original + 1 Copy |
| 8. | Company I.T. paper with Balance sheet-last 3 years | Original + 1 Copy |

**If Retired :**

| | | |
|---|---|---|
| 1. | Retirement order | Original + 1 Copy |
| 2. | Pension proof | Original + 1 Copy |

**If Student**

| | | |
|---|---|---|
| 1. | Leave letter from the Institution (During Working Days) | Original + 1 Copy |
| 2. | Bonafide Certificate (During Vacation)/ID Card | Original + 1 Copy |

**Honeymoon Couple :**

| | | |
|---|---|---|
| 1. | Marriage Certificate ( If the husband name is not endorsed in the wife passport) | Original + 1 Copy |

**If Child Traveling without Parents :**

| | | |
|---|---|---|
| 1. | NOC from parents in Rs. 20 stamp paper duly attested by Notary Public | Original + 1 Copy |
| 2. | Passport copy of parents | Original + 1 Copy |

Same applicable if not traveling with spouse

**If NRI**

| | | |
|---|---|---|
| 1. | Employment proof | Original + 1 Copy |
| 2. | Salary slip for last three months | Original + 1 Copy |
| 3. | Leave letter | Original + 1 Copy |
| 4. | Retirement proof ( if retired) | Original + 1 Copy |

**If Spouse Expired / Divorced :**

| | | |
|---|---|---|
| 1. | Death Certificate | Original + 1 Copy |
| 2. | Divorcement Papers | Original + 1 Copy |

**If Govt Employee**

| | | |
|---|---|---|
| 1. | NOC from Govt. | Original + 1 Copy |
| 2. | Leaver letter | Original + 1 Copy |

Note : The above requirements are only applicable to VISA for UK and Schengen. The procedure may vary from country to country. Hence make sure of the correct documents to be presented before going for an interview.

" ASK IN CASE OF ANY DOUBT "

✦ ✦ ✦



கட்டிடக்கலை பொறியாளரான இவர் ஆர்கிடெக்சர் படிப்பிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார். தற்போது சார்டர்ட் இன்ஜினியராக பணிபுரிகிறார்.

19 வெளிநாடுகளுக்கும் இந்தியாவில் உள்ள பெரும்பாலான பகுதிகளுக்கும் பயணம் செய்திருக்கிறார்.

இமயமலை பகுதியில் மலையேறும் பயிற்சி மேற்கொண்ட இவர் கங்ஜன்சங்கா சிகரத்தின் அடிவாரம் வரை பயணித்துள்ளார்.

கல்லூரி படிப்பின் போது சிறந்த மாணவருக்கான விருதை பெற்ற இவர் டென்னிஸ் விளையாட்டிலும் தங்கம் பதக்கம் பெற்றிருக்கிறார்.

கர்நாடக சங்கீதம் இசைப்பதிலும் ஆர்வம் கொண்டவர்.

இவரின் பல படைப்புகள் பத்திரிக்கைகளில் வெளியாகியுள்ளன.